இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை

வருடாந்த அறிக்கை 2022

தமிழ்

பொருளடக்கம்

1. நிறுவனம் பற்றிய விபரங்கள்
2. எமது நோக்கு,பணிக்கூற்று மற்றும் நோக்கம்
3. முக்கியமான மைற்கற்கள்
4. பிரதான செயற்திறன் பற்றி சாராம்சம்
5. தலைவருடைய வாழ்த்துச்செய்தி
6. பணிப்பாளர் நாயகத்தின் வாழ்த்துச்செய்தி
7. பணிப்பாளர் குழு - 2022
8. பணிப்பாளர் குழு அறிக்கை
9. நிறுவன கட்டமைப்பு மற்றும் பணியாளர்கள் பற்றிய விபரங்கள்
10. செயன்முறைசார் முன்னேற்றம்
    - கல்வி மற்றும் பரிசோதனைப்பிரிவு
    - ஊக்குப்பதார்த்தப்பாவனை உறுதிப்படுத்தல் மற்றும் சட்ட விவகாரங்கள் பிரிவு
    - அமலாக்க மற்றும் செயற்படுத்தல் பிரிவு
    - ஆராய்ச்சிப் பிரிவு
11. பேண்தகைமை பற்றிய அறிக்கை
12. நிறுவன முகாமைத்துவம்
13. அபாய முகாமைத்துவ அறிக்கை
14. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ அறிக்கை
15. நிதி அறிக்கை
16. சுயாதீன கணிக்காய்வாளர்களின் அறிக்கை
17. 2021 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வ அறிக்கை மற்றும் முகாமைத்துவத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை

தற்போது தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுத்துறை வேகமாக வணிகமயமாகி விட்டது. இதன் காரணமாக வெற்றியை மாத்திரமே இலக்காகக் கொண்டு இன்றைய விளையாட்டு வீர வீராங்கணைகள் விளையாட்டில் ஈடுபட முனைகின்றனர். இதன்போது நிலவும் கடுமையான போட்டியின் காரணமாக சட்டவிரோதமான முறைகளை கையாண்டு வெறுமனே வெற்றிகளை யே அடைய ஆசைப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக விளையாட்டில் தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தங்கள் களத்திற்கு வந்துள்ளன. தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுகளில் இத்தடைசெய்யப்பட்ட பொருட்களின் பாவனையானது விளையாட்டின் நம்பகத்தன்மையைப் பாதிப்படையச்செய்வதோடு மட்டுமன்றி இறுதியில் நாடென்ற ரீதியில் சர்வதேச சமூகத்தின் மத்தியில் அபகீர்த்தியை ஏற்படுத்துகிறது மேலும்,ஆற்றல்மிக்க நாட்டின் எதிர்கால சந்ததியின் ஆரோக்கியத்தை சீரழிவடையச்செய்கின்றது

சர்வதேச அளவில் தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தப் பாவனையை தடுக்கும் வகையில் கடந்த 1999ம் ஆண்டு முதல் கனடாவின் மொன்றியல் நகரத்தை கேந்திர நிலையமாகக் செயற்பட்டு வரும் உலக ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையைத் தொடர்ந்து 2013 ஆம் ஆண்டுவரை விளையாட்டுகளில் ஊக்குப்பதார்த்தப் பாவனையை தடுத்தல் மற்றம் அது சம்பந்தமான பிரதிநிதித்துவமானது விளையாட்டு வைத்திய நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

இவ்விடயத்தைக் கையாள்வதற்காக சுயாதினமாக இயங்கும் தனியான நிறுவனமொன்றின் தேவைப்படானது ஏற்கனவே இருந்ததன் காரணமாக 2013 ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆம் திகதியன்று "2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச்சட்டமானது" நிறைவேற்றப்பட்டது.. இச்சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழ் தடைசெய்யப்பட்ட பொருட்கள் மற்றும் முறைகளை இலங்கை விளையாட்டிலிருந்து வேரோடு அழித்தல் என்ற வாசகத்தை தலைப்பாகக்கொண்ட இலங்கை ஊக்குப்பதார்த்தப்பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது ஒரு சட்டபூர்வ வாரியமாக உருவாக்கப்பட்டது.

தற்போது இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் சட்டபூர்வ வாரியமாக செயற்பட்டுவருகின்றது.

விளையாட்டு வீர வீராங்கணைகள் விளையாட்டின்போது பயன்படுத்தக்கூடாத தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தங்களை வேரோடு அழித்தல் மற்றும் சிறந்த தூய்மையான விளையாட்டை ஊக்குவித்தல் ஆகியவை இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் பிரதான நோக்கங்களாகும்.

நிறுவனம் பற்றிய விபரங்கள்

நிறுவனத்தின் பெயர்
இலங்கை ஊக்குபப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை

சட்டரீதியான வடிவமைப்பு
2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்குபப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் இந்நிறுவனமானது ஸ்தாபிக்கப்பட்டது.

ஆரம்பிக்கப்பட்ட திகதி
2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி

காரியாலயம் பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி
363/12, சுகததாச விளையாட்டரங்கு – ப்ளொக் டி , ஸ்டேடியம் பார்க்கிங் ரோட்இ சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு 14

தொடர்பிலக்கம்
0113 071 838
011-2328366

மின்னஞ்சல் முகவரி
sladasl@yahoo.com

இணைய முகவரி
www.antidopingsrilanka.org

வரி அடையாள எண்
409386822

கணக்காய்வாளர்
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

வங்கியாளர்கள்
இலங்கை வங்கி

நோக்கு

சரியான மற்றும் நியாயமான வெற்றிக்காக ஊக்குப்பதார்த்தப்பாவனையற்ற இலங்கை விளையாட்டிற்குச் சக்தியூட்டல்.

பணிக்கூற்று

உலக போதைப்பொருள் தடுப்புச் சட்டம் மற்றும் இதன் ஒழுங்கு விதிகளுக்கமைய 2013 இலக்கம் 33 கொண்ட விளையாட்டுக்களில் ஈடுபடும் போது ஊக்கமருந்து பயன்பாட்டிற்கு எதிரான இணக்கப்பாட்டுச் சட்டத்தை அமல்படுத்தல்.



நோக்கங்கள்

முதன்மை நோக்கம்

இலங்கையின் ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான கொள்கைக்கு இணங்க செயற்படுவதை ஆதரித்தல்.

துணை நோக்கங்கள்

- தேசிய ஊக்குப்பதார்த்தக் கொள்கை குறித்து அரசாங்கம், விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் தேசிய ஒலிம்பிக் குழுவிற்கு தெரியப்படுத்துதல்.
- 2021 உலக ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சர்வதேச நியமங்களை இலங்கை முழுவதும் நடைமுறைப்படுத்துவதில் முன்னணி வகித்தல்.
- தேசிய ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான கொள்கைக்கு இணங்குவதற்காக அனைத்து விளையாட்டுச் சங்கங்கள்/நிறுவனங்களுக்கு ஆதரவு வழங்குதல்.
- வணிகரீதியாக தொடர்புபடக்கூடிய உலக ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் பிராந்திய ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான நிறுவனங்களோடு புதுப்பிக்கப்பட்ட ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான நடைமுறைகள் மற்றும் நிபுணத்துவ அறிவை பகிர்ந்துகொள்ளல்.
- WADA மற்றும் iNADO உட்பட பலம்வாய்ந்த ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான நிறுவனங்களோடு ஒத்துழைப்புடன் செயற்படுதல்.
- தேசிய முக்கியத்துவம் வாய்ந்த உயர்மட்ட விளையாட்டு நிகழ்வுகளில் ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான நடவடிக்கைகள் குறித்த நிபுணத்துவ ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலை வழங்குதல்.
- அனைத்து முக்கிய போட்டி நிகழ்வுகள் சம்பந்தப்பட்ட பொறுப்புகையும் உலகத்தர நியமங்களுக்கமைவாக நிறைவேற்றுதல்.
- தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டை தடுப்பதற்கான அபாய அடிப்படையிலான ஒருங்கிணைந்த திட்டத்தை வழங்குதல்.
- இலங்கையில் விளையாட்டுக்களில் தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தப் பாவனையின் அபாயங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிபுணர்களைக் கொண்டு தொடர்ந்து மதிப்பீடு செய்தல்.
- சட்ட அமலாக்கம் உட்பட நடைமுறையிலுள்ள முகாம்கள் மூலம் புலனாய்வுத் தகவல்களை சேகரிப்பதில் திறன்களை மேம்படுத்தல்.
- இலங்கையின் விளையாட்டு மற்றும் கல்வித் தத்துவம் வாயிலாக கல்வித்திட்டங்கள் வாயிலாக தடுப்பு அடிப்படையிலான நன்னெறிகளை வலுவடையச்செய்தல், மிகப் பொருத்தமான நடைமுறைக்கருவிகள் மற்றும் ஆதரவு வழங்கும் சேவைகளை மேம்படுத்துதல் முலமாக ஆதரவு வழங்குதல்.
- உளவுத்துறைசார் விபரங்களுக்கு முன்னுரிமை வழங்கக்கூடிய ஆற்றல்மிக்க மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பரிசோதனைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதி மீறல்களை தீவிர விசாரணைக்குட்படுத்தி வழக்குத்தாக்கல் செய்தல்.
- சர்வதேசக்கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைப் பயன்படுத்தி விளையாட்டு வீர வீராங்கணைகளுக்கு ஒரு சமநிலையான விளையாட்டுச்சூழலை மேம்படுத்தல்

SLADA Key Milestones

2013 Established under the Act



PARLIAMENT OF THE DEMOCRATIC
SOCIALIST REPUBLIC OF
SRI LANKA

CONVENTION AGAINST DOPING IN
SPORT ACT, No. 33 OF 2013

slantidoping.org/slada_code.html

2018 Hosted the 15th Asia/Oceania Intergovernmental Ministerial Meeting in Colombo



2019 Opened new SLADA Headquarters building in Colombo





slantidoping.org/history.html

2021 Opened the new Research Laboratory at SLADA





slantidoping.org/lab_opening2021.html

பிரதான செயற்திறன் பற்றிய சாராம்சம்

விபரம்	**எண்ணிக்கை**	**2018**	**2019**	**2020**	**2021**	**2022**
தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தங்களுக்கான பரிசோதனைகளை நடாத்துதல்	எண்ணிக்கை	276	260	106	177	138
ஊக்குப்பதார்த்தப் பாவனை உறுதிப்படுத்தல்	எண்ணிக்கை	10	06	02	04	05
ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்துதல்	எண்ணிக்கை	06	06	08	02	09
மேன்முறையீட்டு விசாரணைகளை நடாத்துதல்	எண்ணிக்கை	-	03	-	04	07
விளையாட்டு வீரர்கள் மற்றும் தொடர்புடைய நபர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல்.	நிகழ்ச்சிகள்	67	46	28	35	48
விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் பங்குபற்றியோர்	நபர்கள்	2114	3357	965	1600	2316
ஆராயச்சி தொடர்பான Abstract அறிக்கையின் வெளியீடு	எண்ணிக்கை	03	00	01	00	02
ஆய்வு அறிக்கைகளை வெளியிடுதல்	எண்ணிக்கை	00	00	00	02	01
மென்பொருள் உருவாக்கம் (கையடக்கததொலைபேசி மற்றும் இணையம்)	எண்ணிக்கை	01	01	01	00	00
மொத்த பணியாளர்கள்	நபர்கள்	23/27	23/27	22/28	23/29	19/29
சம்பளங்கள் மற்றும் வேதனங்கள்	ரூ.மி.	13.1	13.4	13.4	15.5	16.7
வருமானம்	ரூ.மி.	0.42	0.72	2.93	1.85	2.23
சொத்து மற்றும் உபகரணங்கள்	ரூ.மி.	194	273	286	270	260
நடைமுறைச்சொத்துக்கள்	ரூ.மி.	2.3	4.9	4.6	7.4	5.3
நடைமுறைப்பொறுப்புகள்	ரூ.மி.	9.4	8.2	15.3	16.0	15.2

தலைவரின் வாழ்த்துச்செய்தி



இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது 2022 ஆம் ஆண்டிற்கான சிறந்த செயற்திறனைக்காட்டுகிறது. குறிப்பாக சில ஆண்டுகளாக ஆக்கிரமித்து வந்த COVID 19 தொற்றுநோய் நிலைமை படிப்படியாகக் குறைந்து வருவதால், இந்நிறுவனமானது புதிய உத்வேகத்துடன் தனது பணியைத் தொடர வாய்ப்புக் கிட்டியுள்ளது

இலங்கையில் தூய்மையான விளையாட்டு உணர்வை மேம்படுத்துவதோடு தடைசெய்யப்பட்ட ஊக்குமருந்து தொடர்பான சர்வதேச போக்குகளை புதுப்பித்த நிலையில் வைத்திருப்பதற்கு எமது நிறுவனம் மிக பொறுப்புடன் செயற்பட்டு வருகின்றது. இதனால் ,இலங்கையின் ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது நாட்டின் திறமையான விளையாட்டு வீர வீராங்கணைகள் சர்வதேச மட்டத்திலான பங்குபற்றுவதற்கான வாய்ப்பை உறுதிசெய்கின்றது.

2022 ஆம் ஆண்டில் சவாலான பொருளாதாரப் பின்னணி நிலவியபோதிலும் குறைந்த நிதி வளங்களைப் பயன்படுத்தி ஊக்குப்பதார்த்தப் பரிசோதனைகளை நடாத்தி ஊக்குப்பதார்த்தப் பாவனைக்குட்பட்ட 8 விளையாட்டு வீரர்களை இனங்கான இந்நிறுவனத்தினால் முடிந்தது. சம்பந்தப்பட்ட விளையாட்டு வீரர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு இதன்மூலம் ஒட்டுமொத்த விளையாட்டுக்கும் ஏற்படக்கூடிய சேதத்தை குறைப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் தொடர்ந்து நடாத்தப்படுகின்றன

மேலும் ஊக்குப்பதார்த்தம் தொடர்பான சட்ட வரைமுறைகள் குறித்து பொலிஸ் அதிகாரிகளுக்கு விளக்கும் நிகழ்ச்சிகளும் நாடளாவிய ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. சம்பந்தப்பட்ட சட்ட அமலாக்கப் பொறிமுறைக்காக 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தை திருத்தியமைத்தலானது 2022 ஆம் ஆண்டில் இடம்பெற்றது.

எதிர்வரும் ஆண்டிற்குள் இவ்விலக்கை அடைவதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டுள்ளதோடு அதன்மூலம் தடைசெய்யப்பட்ட பதார்த்தங்களை இறக்குமதி செய்து விநியோகிப்பவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. இதன் முதன்மை நோக்கமானது நாட்டிற்குள் ஊக்குமருந்து உட்புகுத்தப்படும் மூலாதாரங்களை தடுப்பதன் மூலம் தூய்மையான மற்றும் உண்மையான விளையாட்டை ஊக்குவிப்பதாகும்.

விசேடமாக தடைசெய்யப்பட்ட ஊக்குமருந்து பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சியை விளையாட்டு மருத்துவ அதிகாரிகளுக்காக ஏற்பாடு செய்தல் மற்றும் அடையாளங்காணப்பட்ட சிறப்பு குழுக்களுக்கான கல்வி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல் போன்றவை 2022 ஆம் ஆண்டிற்குள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது

அவ்வாறே ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் ஆய்வுகூட செயற்பாடுகள் தற்போதுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து மீள ஆரம்பிக்கப்பட்டமையும் 2022 ஆம் ஆண்டின் செயற்திறனில் ஏற்பட்ட முன்னேற்றமாக அடையாளப்படுத்தப்படமுடியும்.

இவ்வாண்டு முழுவதும் இவ்வாறான சிறப்பான செயற்திறனை வெளிப்படுத்தி நிறுவனத்தின் பணியை சரியான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கு பலவழிகளில் உதவிய அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு சிறப்பான செயற்திறனை வெளிப்படுத்தியமை மற்றும் அதன் முன்னேற்றத்திற்காக எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.மேலும் இந்நிறுவனமானது ஸ்தாபிக்கப்பட்டு 10 ஆண்டுகள் நிறைவடையவுள்ள 2023 ஆம் ஆண்டில் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்ட சகல தரப்பினருக்கும் அழைப்புவிடுக்கின்றேன்.

பேராசிரியர் அர்ஜுன டி சில்வா
தலைவ

பணிப்பாளர் நாயகத்தின் வாழ்த்துச்செய்தி



விளையாட்டுக்களில் தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து மற்றும் முறைகளை வேரோடு ஒழித்து தூய்மையான விளையாட்டுக்கான சூழலை உருவாக்கும் உன்னத இலக்குடன் இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது 2022 ஆம் ஆண்டு தனது பெருமைமிக்க 9 ஆம் ஆண்டை ஆரம்பித்தது. இந்த 9 வருட காலப்பகுதியில் இலங்கையில் நேர்மையான விளையாட்டு கலாச்சாரத்தை ஊக்குவிப்பதில் எமது நிறுவனம் ஆற்றிய பணியானது பாராட்டத்தக்கது. 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் எமது நாட்டில் நிலவிய உலகளாவிய தொற்றுநோய் மற்றும் ஆண்டின் நடுப்பகுதியில் எழுந்த பொருளாதார சவால்கள் இருந்தபோதிலும் இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது தனது பொறுப்பை செவ்வனே நிறைவேற்றியது.

இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் ஒரு முக்கிய பணியாகிய ஊக்குப்பதார்த்தப் பணிகளை நடாத்துவதானது ஆண்டு முழுதும் சந்தர்ப்பத்திற்கேற்றவகையில் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறான 138 பரிசோதனைகள் 2022 ஆம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டன. போட்டிக்கு வெளியே (Out of Competition) போட்டியில் ஈடுபடும்போது (In Competition) விளையாட்டு வீர வீராங்கணைகள் ஊக்குப்பதார்த்தப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். 2022 ஆம் ஆண்டு நிலவிய சவால்களுக்கு மத்தியில் ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டை தடுப்பதற்காக 46 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டதோடு பல விளையாட்டு வீர வீராங்கணைகள் இ விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் விளையாட்டு ஆர்வலர்கள் பங்குபற்றினர். 2022 ஆம் ஆண்டில் மொத்த பங்கேற்பு 1854 ஆகும்.

விளையாட்டில் ஊக்குப்பதார்த்தப் பாவனையைத் தடுப்பதற்காக 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச்சட்டத்தின் ஏற்பாடுகள் குறித்து இலங்கை காவல்துறை அதிகாரிகளுக்கு விளக்குவதற்கான பல நிகழ்ச்சிகள் இவ்வாண்டில் இடம்பெற்றன. தடைசெய்யப்பட்ட பொருட்கள் அடங்கிய உணவுக்குறைநிரப்பிகள் மற்றும் செயற்திறனை அதிகரிக்கும் மருந்துவகைகளால் விளையாட்டுத்துறைக்கு ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள் குறித்து மருந்தாளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன.

2022 ஆம் ஆண்டில் எமது நிறுவனத்தினால் விளையாட்டு மருத்துவம் பயின்ற மருத்துவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் நேரடித்தலையீட்டினால் பாடசாலை மாணவர்களின் பாடவிதானத்தில் ஊக்குப்பதார்த்தப்பாவனையை தடுத்தல் தொடர்பான விடயங்களை உள்ளடக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2024 ஆம் ஆண்டில் 6, 8 மற்றும் 10 ஆம் வகுப்புகளுக்காகவும், 2025 ஆம் ஆண்டில் 7,9 மற்றும் 11 ஆம் வகுப்புக்களுக்காகவும் உடற்கல்வி பாடத்தின் கீழ் இவ்விடயங்களை பாடவிதானத்தில் உள்ளடக்குவதற்கான வாய்ப்பு கிட்டியுள்ளது.

இலங்கை ஊக்குப்பதார்த்தப பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் ஆராய்ச்சி ஆய்வுகூடத்தினுள் Liquid Chromatography Triple Quadrupole Mass Spectrophotometer (LC-MS/MS) உபகரணங்கள் உள்ளடங்களாக அதிநவீன உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இவ்வியந்திரத்தை நிறுவி 2022 ஆம் ஆண்டில் செயற்பாட்டிற்கு கொண்டுவரமுடிந்தது. இவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் ஆய்வுகளை மேற்கொள்ளவும் அதனூடாக ஆய்வுகட்டுரைகளை தயாரிப்பதற்கும் அவற்றை சர்வதேசளவில் பரிமாற்றிக்கொள்வதற்குமான வாய்ப்பு கிட்டும். ஆய்வுகளை மேற்கொள்வது தொடர்பில் இலங்கையில் உள்ள பல்வேறு அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு தமது ஆய்வுகளை மேற்கொள்வதற்கு எமது ஆய்வுகூடத்தைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குவதன் மூலமாக நிறுவனத்திற்கான மேலதிக வருமானத்தை ஈட்டமுடியும.

இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகளை வரும் ஆண்டுகளில் மேலும் விரிவுபடுத்துவதற்கு எதிர்ப்பார்த்துள்ளோம். எமது நாட்டில் நிலைபேண்தகு மற்றும் போலித்தன்மையற்ற விளையாட்டுக்கான கலாச்சாரத்தை உருவாக்குவதற்கு பேருதவியாக இருக்கும். 2022 ஆம் ஆண்டில் நாம் அடைந்த வெற்றிகளுக்கு பங்களித்த அனைத்து தரப்பினருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மைக்கு, தற்போதும் எதிர்வரும் காலங்களிலும் இலங்கையில் தூய்மையான விளையாட்டுத்துறைக்கு சிறந்த நிலைபேண்தகு சேவையை வழங்குவதற்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

வைத்தியர் சீவலி ஜயவிக்ரம
பணிப்பாளர் நாயகம்

பணிப்பாளர் சபை - 2022



பேராசிரியர் அர்ஜுன டி சில்வா
தலைவர்



பேராசிரியர் லால் ஜயக்கொடி
உறுப்பினர்



பேராசிரியர் ரவீந்திர பர்ணாண்டோ
உறுப்பினர்



திரு.டப்ளியூ.ஏ.குலசூரிய
உறுப்பினர்



திரு.ஏ.ஜே.எஸ்.எஸ்.எதிரிசூரிய
உறுப்பினர்



வைத்தியர் லால் ஏக்கநாயக்க
உறுப்பினர்



திரு.சஜித் ஜயலால்
உறுப்பினர்



திரு.எச்.எம்.எம்.எஸ்.தர்மவர்த்தன
உறுப்பினர்



வைத்தியர்.அன்வர் ஹம்டானி
உறுப்பினர்



வைத்தியர் ருக்ஷான் பெல்லன
உறுப்பினர்

பணிப்பாளர் குழு அறிக்கை
2022 ஆம் ஆண்டிற்கான பணிப்பாளர் குழுவின் ஆண்டறிக்கை

சட்ட ரீதியான தகைமை

இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது விளையாட்டில் ஊக்குப்பதார்த்தப் பாவனைக்கெதிரான சர்வதேச உடன்படிக்கைகளின் கட்டமைப்பிற்குள் விளையாட்டில் ஊக்குமருந்து பாவனைக்கெதிராக பொருந்தக்கூடிய உள்நாட்டு சட்டப்பொறிமுறையை முன்னெடுத்துச்செல்வதற்காக நிறுவப்பட்டது.

இது 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு சட்டபூர்வ அமைப்பாகும்.

பணிப்பாளர் குழுவின் பொறுப்புகள்

2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச்சட்டத்தின் 15 ஆம் பிரிவின் கீழ் முகவராண்மையின் நோக்கம் சார்ந்த ஒரு விடயம் அல்லது அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் அமைச்சரால் முன்வைக்கப்படும் யாதாயினும் ஒரு விடயம் தொடர்பாகவும் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதானது பணிப்பாளர் குழுவின் பொறுப்பாகும். மேலும் இச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரால் அவ்வப்போது எழுத்துப்பூர்வமான விசேட அல்லது பொது கட்டளைகள் வெளியிடப்படுவதோடு பணிப்பாளர் குழுவால் அக்கட்டளையானது நிறைவேற்றப்படவேண்டும்.

நிர்வாக ரீதியான பங்களிப்பு

2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச்சட்டத்தின் பிரகாரம் முகவராண்மைச் செயற்பாடுகளின் நிர்வாகம்,முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடானது பணிப்பாளர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முகவராண்மையின் நிர்வாகச் செயற்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக பணிப்பாளர் குழுவினால், இச்சட்டத்தின் மூலமாக முகவராண்மையின் மீது சுமத்தப்பட்ட அல்லது வழங்கப்பட்ட அதிகாரங்கள் , செயற்பாடுகள் அல்லது நடைமுறைகளை நடைமுறைப்படுத்துதல், நிறைவேற்றுதல் அல்லது செயற்படுத்தல்.

தலைமைத்துவம் சார்ந்த பங்களிப்பு

அதன் தலைமைத்துவம் சார்ந்த பங்களிப்பினுள், பணிப்பாளர் குழுவின் கடமைகளுக்கு மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுக்கான வழிகாட்டல் உள்ளடக்கப்படவேண்டும்.

* ஊக்குப்பதார்த்தம் பயன்பாட்டிற்கெதிரான செயற்பாடுகளை திட்டமிடல், ஒருங்கிணைத்தல், செயற்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
* ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளை மீறுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல்.
* எந்தவொரு நடைமுறை அல்லது நிலையான சொத்தொன்றை (விற்பனை செய்வதற்கு, பரிசாக அல்லது பல்வேறு வகைகளில்) கையகப்படுத்துவதற்கு ,வைத்திருப்பதற்கு,குத்தகைக்கு விடுவதற்கு, அடமானம் வைப்பதற்கு,அல்லது பல்வேறு வகையில் அப்புறப்படுத்தல். .
* ஒரு குறிப்பிட்ட வங்கியில் நடைமுறை மற்றும் சேமிப்புக்கணக்குகளை திறந்து பராமரித்தல்.

* இலங்கைக்கு உள்ளே அல்லது வெளியிலுள்ள நபர்களிடமிருந்து அல்லது அமைப்புகளிடமிருந்து நன்கொடைகளை ஏற்றுக்கொள்ளல்.
* முகவராண்மையின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துச்செல்லல் அல்லது அதன் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான சில மற்றும் அனைத்து ஒப்பந்தங்களிலும் ஈடுபடுதல் அல்லது நிறைவேற்றுதல்.
* முகவராண்மைக்குச் சொந்தமான எந்தவொரு பணத்தையும் முதலீடு செய்தல்.
* அதன் செயற்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவைப்படும் எந்தப் பணத்தையும் முறையாகக் கையாளுதல்.
* இச்சட்டத்தின் கீழ் முகவராண்மையின் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அதிகாரிகளை மற்றும் பணியாளர்களை நியமித்தல்,பணியமர்த்தல்,வழங்குதல் மற்றும் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் பணிநீக்கம் செய்தல்.
* முகவராண்மையால் வழங்கும் சேவைகள் மற்றும் உதவிகளுக்கான கட்டணங்களை வசூலித்தல்.
* முகவராண்மையின் செயற்திறன்களை நிறைவேற்றுவதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்குத் தேவையென உத்தேசிக்கப்படும் அனைத்து விடயங்களையும் செயற்படுத்தல்.

அமைப்பு.

இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் பணிப்பாளர் குழுவானது தலைவர் உட்பட பத்து (10) உறுப்பினர்களைக் கொண்டுள்ளது

- பேராசிரியர் அர்ஜுன டி சில்வா – தலைவர்
- திரு.சஜித் ஜயலால் - உறுப்பினர்
- திரு.ஏ.ஜே.எஸ்.எஸ்.எதிரிசூரிய - உறுப்பினர்
- வைத்தியர்.நிஹால் முனசிங்க மஹகமகே– உறுப்பினர் (2022 ஒக்டோபர் மாதம் முதல் ஓய்வுபெற்றார்)
- திரு.எஸ்.ஐ.எம்.ரோசா– உறுப்பினர் (2022 பெப்ரவரி மாதம் முதல் ஓய்வுபெற்றார்)
- திரு.டப்ளியூ.ஏ.குலசூரிய – உறுப்பினர்
- வைத்தியர் லால் ஏக்கநாயக்க – உறுப்பினர்
- பேராசிரியர் லால் ஜயக்கொடி – உறுப்பினர்
- வைத்தியர்.அன்வர் ஹம்டானி – உறுப்பினர்
- பேராசிரியர் ரவீந்திர பர்ணாண்டோ – உறுப்பினர்
- திரு. எச்.எம்.எம்.எஸ்.தர்மவர்த்தன (2022 மார்ச் மாதம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில்)
- வைத்தியர்.ருக்ஷான் பெல்லன (2022 நவம்பர் மாதம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில்

கூட்டங்கள் மற்றும் பங்கேற்பு


பணிப்பாளர் குழுவானது 2022 ஆம் ஆண்டில் 12 சந்தர்ப்பங்களில் கூடியதோடு பணிப்பாளர் குழுவின் வருகை கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆகும்.

பெயர்	சனவரி 20ம் திகதி	பெப்ரவரி 17ம் திகதி	மார்ச் 31ம் திகதி	ஏப்ரல் 21ம் திகத	மே 19ம் திகதி	ஜூன் மாதம் 30ம் திகதி	ஜூலை மாதம் 28ம் திகதி	ஆகஸ்ட் மாதம் 18ம் திகதி	செப்டம்பர் மாதம் 22ம் திகதி	ஒக்டோபர் மாதம் 20ம் திகதி	நவம்பர் மாதம் 22ம் திகதி	டிசம்பர் மாதம் 15ம் திகதி
பேராசிரியர் அர்ஜுன டி சில்வா	✓	✓	✓	✓	✓	✓	✓	✓	✓	✓	✓	✓
பேராசிரியர் லால் ஜயக்கொடி	✓	✓	✓	✓	✓	✓	✓	✓	✓	✓	✓	✓
பேராசிரியர் ரவீந்திர பர்ணாண்டோ	✓	✓	✓	✓	✓	✓	✓	✓	✓	✓	✓	_
திரு.டப்ளியூ.ஏ.குலசூரிய	✓	✓	_	✓	✓	✓	✓	✓	✓	✓	✓	✓
திரு.ஏ.ஜே.எஸ்.எஸ்.எதிரிசூரிய	✓	_	✓	✓	_	✓	_	✓	✓	✓	✓	✓
வைத்தியர் லால் ஏக்கநாயக்க	✓	✓	✓	✓	✓	✓	_	✓	✓	✓	✓	✓
திரு.சஜித் ஜயலால்	✓	✓	✓	✓	✓	✓	✓	✓	✓	✓	✓	✓
வைத்தியர்.அன்வர் ஹம்டானி	✓	✓	_	✓	_	_	_	_	✓	_	✓	_
வைத்தியர்.ருக்ஷான் பெல்லன											✓	✓
திரு. எச்.எம்.எம்.எஸ்.தர்மவர்த்தன			✓	_	✓	✓	✓	✓	✓	✓	✓	✓
வைத்தியர்.நிஹால் முனசிங்க மஹகமகே	_	_	_	_	_	_	_	_	_	_		
திரு.எஸ்.ஐ.எம்.ரோசா	_	_										

எமது பணியாளர் குழு



நிறுவன கட்டமைப்பு


தலைவர்
பணிப்பாளர் சபை
பணிப்பாளர் நாயகம்
பணிப்பாளர் (கல்வி மற்றும் பரிசோதனை)
உதவிப் பணிப்பாளர்
முகாமைத்துவ உதவியாளர்
ஆராய்ச்சி உத்தியோகத்தர்
தொழில்நுட்ப உதவியாளர் (01) (ஆய்வுகூடம்)
கணக்காளர்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
முகாமைத்துவ உதவியாளர்
தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
நிர்வாக உத்தியோகத்தர்
மோழிபெயர்ப்பாளர்
அபிவிருத்தி உத்தியோகத்தர் (01)
தொழில்நுட்ப உதவியாளர் (01)
முகாமைத்துவ உதவியாளர்
சாரதி (04)
அலுவலக உதவியாளர் (03)
சட்ட உத்தியோகத்தர் / பணிப்பாளர் சபை செயலாளர்
பணிப்பாளர் (அமலாக்கம் மற்றும் செயற்படுத்தல்)
உதவிப் பணிப்பாளர்
முகாமைத்துவ உதவியாளர்
HM
MM 1.1
AR-1
JM
MA-4
MA-3
MA1-1
MA 2-1
PL-3
PL-1

பணியாளர் குழாம் தொடர்பான விபரங்கள்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மைக்காக 29 பணியாளர்களைக்கொண்ட குழாமுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

	பதவி	சம்பள அளவீடு	பதவி எண்ணிக்கை	தற்போதைய பணியாளர்களின் எண்ணிக்கை	பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை
01.	பணிப்பாளர் நாயகம்	HM 2-1	1	1	
02.	பணிப்பாளர்	HM 1-1	2		2
03.	உதவிப் பணிப்பாளர் /பிரதிப்பணிப்பாளர்	MM 1-1	2	2	
04.	கணக்காளர்	MM 1-1	1	1	
05.	சட்ட உத்தியோகத்தர் / பணிப்பாளர் சபை செயலாளர்	MM 1-1	1	1	
06.	ஆராய்ச்சி உத்தியோகத்தர்	AR 1	3	2	1
07.	நிர்வாக உத்தியோகத்தர்	JM 1-1	1	1	
08.	தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்	JM 1-1	1		1
09.	மொழி பெயர்ப்பாளர்	MA-4	1	1	
10.	அபிவிருத்தி உத்தியோகத்தர்	MA 3	3	1	2
11.	முகாமைத்துவ உதவியாளர்	MA 1-1	4	4	
12.	தொழில்நுட்ப உதவியாளர்	MA 2-1	2	1	1
13.	சாரதி	PL 3	4	2	2
14.	அலுவலக உதவியாளர்	PL 1	3	2	1
மொத்தம்			**29**	**19**	10

செயற்பாட்டு முன்னேற்றம்

கல்வி மற்றும் பரிசோதனைப் பிரிவு

விளையாட்டானது நம் வாழ்க்கைக்கு மிகவும் நெருக்கமானது ஏனெனில் அது உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் ஆரோக்கியமாக இருப்பதைக் காட்டிலும் ஆன்மீக ரீதியில் ஒழுக்கமான மற்றும் நன்னடத்தைக் கொண்ட ஒரு முழுமையான மனிதனை உருவாக்குவதில் பெரும் பங்களிப்பை வழங்குகின்றது. 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பெருமையையும் மாபெரும் வரலாற்றையும் கொண்ட சர்வதேச விளையாட்டானது மாபெரும் வளர்ச்சியடைந்து மிகவும் சிக்கலான நிலைக்கு உட்பட்டுள்ளது. இது படிப்படியாக நவீனமயமாக்கப்படுவதால் "விளையாட்டு பங்கேற்பு" என்ற நீண்டகால கருத்தாக்கத்தின் முக்கியத்துவமானது படிப்படியாகக் குறைவடைந்து "வெறுமனே வெற்றியை" தொடர்வதற்கான ஒரு திட்டவட்டமான குறிக்கோளையும் ஒருமித்த விருப்பத்தையும் நவீன விளையாட்டுத்துறையில் காணலாம். இன்றைய விளையாட்டானது மிகவும் ஒழுங்கமைக்கபட்டு வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியடைந்திருப்பதும் அதிக போட்டித்தன்மையுடையதாகவும் உருப்பெற்றிருக்கின்றமை அத்துறையினுள் விளையாட்டிற்கு நிலவும் வெற்றியடைவதற்கான தாகம் காரணமாகவேயாகும்.

மேலும் விளையாட்டு படிப்படையாக வளர்ச்சிபெற்று அபிவிருத்தியடைந்து போட்டித்தன்மை அதிகரிப்பதால் நவீன மற்றும் மேம்பட்ட தொழிநுட்ப உத்திகள் மற்றும் கருவிகள் நவீன காலப்பகுதியில் இணைக்கப்படும்போது அவற்றை முறையாகச் செயற்படுத்தல் , கையாளுதல் மற்றும் கட்டுப்படுத்துவதற்கான பொதுவான விதிமுறைகளின் தேவைப்பாடு மற்றும் முக்கியத்துவமானது வலுவாக முன்னிலைப்படுத்தப்படுகின்றது. இதன் விளைவாகவே விளையாட்டில் தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தங்கள் மற்றும் முறைகளின் பாவனையை கட்டுப்படுத்துவதற்கான சட்டவிதிமுறைகள் உள்ளுர் மற்றும் சர்வதேச விளையாட்டுத்துறையில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது.

தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தங்கள் மற்றும் முறைகளின் பாவனையின் மிக ஆபத்தான விளைவானது அதன்மூலம் மிகத் திறமையான விளையாட்டு வீர வீராங்கணைகளின் முழு விளையாட்டுசார் வாழ்க்கையும் அநியாயமாக இழக்கப்படுகின்றது. அத்துடன் அவர்கள் மூலமாக நாட்டிற்கு கிடைக்கவிருந்த மதிப்புமிக்க சர்வதேச மட்டத்திலான வெற்றிகளை அநியாயமாக இழக்கநேரிடுகின்றது. அத்தோடு உலகரங்கில் பிரபலமடையும் இத்தகைய சர்ச்சையான விடயங்கள் காரணமாக நாட்டிற்கு அவமானமும் அபகீர்த்தியும் ஏற்படுகிறது. மறுபுறம் இங்குள்ள மற்றுமொரு நீண்டகால பிரச்சினை யாதெனில் நாட்டின் உயிர்நாடியான எதிர்கால சந்ததியினரின் உடல் மற்றும் மனரீதியான ஆரோக்கியம் மோசமடைந்து நோய்வாய்ப்பட்ட சமூகமானது எதிர்காலத்தில் உருவாவதற்கான சாத்தியக்கூறு அதிகரித்தல் இதில் நீண்டகாலமாக நிலவக்கூடிய மற்றுமொரு பிரச்சினையாகும். எனவே தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தப் பாவனையிலிருந்து விலகியிருப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி இந்நாட்டு விளையாட்டு சமூகம் மற்றும் அவர்களின் ஆதரவு ஆளணியினர் அனைவருக்கும் இது குறித்த விழிப்புணர்வு வழங்குதல் இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை கல்விப் பிரிவின் பிரதான நோக்கமாகும்.

அதன்படி 2021 ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் மாதம் வரை நடாத்தப்பட்ட தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்பான விபரங்கள் கீழ்வருமாறு. விளையாட்டு வீரர்கள் மற்றும் விளையாட்டுத்துறையில் ஈடுபாடுடையவர்களை இலக்காகக் கொண்டு இந்நிகழ்ச்சிகள் நாடளாவிய ரீதியில் செயற்படுத்தப்படுகின்றன.

2022 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பற்றிய சாராம்சம் மற்றும் தகவல்கள்

தேசிய விளையாட்டு அணிகள் மற்றும் தேசிய சம்மேளங்கள்





கனிஷ்ட தேசிய குழாம் மற்றும் வளர்ந்துவரும் அணிகள





விளையாட்டுக்கழகங்கள்,முப்படை மற்றும் பாடசாலை விளையாட்டு அணிகள





விளையாட்டு தொடர்பான இளங்கலை பட்டதாரிகள்





ஊக்குமருந்து கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்கள், ஊக்குமருந்து கட்டுப்பாட்டு உதவியாளர்கள் மற்றும் விளையாட்டு மருத்துவர்கள






கண்காட்சி கூடங்கள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள விநியோகத்திற்கான முகாம்கள






2022 ஆம் ஆண்டிற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கான இலக்குகள் மற்றும் முன்னேற்றம் கீழ்வருமாறு.


காலாண்டு	இலக்குபடுத்தப்பட்ட மதிப்பீடு		உண்மையான மதிப்பீடு	
	கருத்தரங்கு எண்ணிக்கை	பங்கேற்பு	கருத்தரங்கு எண்ணிக்கை	பங்கேற்பு
Q1	10	375	12	506
Q2	9	350	7	244
Q3	11	400	12	567
Q4	10	375	15	537
மொத்தம்	40	1500	46	1854






ஊக்குப்பதார்த்தக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள்

இலங்கையில் தடைசெய்யப்பட்ட ஊக்குமருந்து பாவனையற்ற தூய்மையான விளையாட்டுக்கான சூழலை உருவாக்கி தூய்மையான விளையாட்டு வீரர்களை பாதுகாக்கும் நோக்கில் 2022 ஆம் ஆண்டு இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையால் நடாத்தப்பட்ட ஊக்குமருந்து சோதனைகள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு.







இல	விளையாட்டு	போட்டியின்போது நடாத்தப்பட்ட ஊக்குமருந்து பரிசோதனைகளின் எண்ணிக்கை	போட்டிக்கு வெளியே நடாத்தப்பட்ட ஊக்குமருந்து பரிசோதனைகளின் எண்ணிக்கை	மொத்த ஊக்குமருந்து பரிசோதனைகளின் எண்ணிக்கை	தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தப் பாவனை உறுதிசெய்யப்பட்ட சந்தர்ப்பங்கள்
1.	ரக்பி	16	4	20	-
2.	மெய்வல்லுனர் போட்டிகள்	29	6	35	-
3.	சைக்கிளோட்டம்	12	-	12	03
4.	பளு தூக்குதல்	13	9	22	-
5.	கிரிக்கட்	10	-	10	-
6.	பூப்பந்தாட்டம்	-	2	2	-
7.	வலு தூக்குதல்	9	-	9	02
8.	பரா மெய்வல்லுனர் போட்டிகள்	3	4	7	-
9.	குத்துச்சண்டை	4	-	4	-
10.	மல்யுத்தம்	-	5	5	-
11.	ஜிம்னாஸ்டிக்	-	2	2	-
12.	கூடைப்பந்து	-	4	4	-
13.	பேஸ்பால்	4	-	4	-
14.	ஸ்குவாஷ்	-	2	2	-
	மொத்தம்	**100**	**38**	**138**	**05**



ஒவ்வொரு விளையாட்டிலும் மேற்கொள்ளப்பட்ட ஊக்குமருந்து பரிசோதனைகளின் எண்ணிக்கை மற்றும் ஊக்குப்பதார்த்தப் பாவனை



உறுதிசெய்யப்பட்ட சந்தர்ப்பங்கள்



ஊக்குமருந்து பாவனை உறுதிபடுத்தப்படுதல் மற்றும் சட்ட விவகாரங்களுக்கான பிரிவு 2022 ஆம் ஆண்டுக்கான முன்னேற்றம்

- 2022 ஆண்டில் ஊக்குப்பதார்த்தப் பாவனை உறுதிபடுத்தப்பட்ட வீர வீராங்கணைகள் தொடர்பாக,
    - நடாத்தப்பட்ட ஆரம்பகட்ட விசாரணைகளின் எண்ணிக்கை - 9
    - நடாத்தப்பட்ட ஒழுக்காற்று விசாரணைகளின் எண்ணிக்கை - 9
    - நடாத்தப்பட்ட மேன்முறையீட்டு விசாரணைகளின் எண்ணிக்கை - 7
- நடாத்தப்பட்ட அனைத்து ஒழுக்காற்று மற்றும் மேன்முறையீட்டு விசாரணைகள் தொடர்பான அறிகைகைகள் மற்றும் தீர்ப்பு தொடர்பான ஆவணங்களை முழுமைப்படுத்தல்.
- ஊக்குமருந்து பாவனை உறுதிசெய்யப்பட்டது முதல் இறுதி தீர்ப்பு வழங்கப்படும் வரை ஒவ்வொரு வீரரோடும் தொடர்புடைய ஒருங்கிணைப்பு நடைமுறைகளை மேற்கொள்ளல் மற்றும் கோப்புகளை பராமரித்தல்.
- இவ்வாண்டில் ஏற்பாடு செய்யப்பட்ட பணிப்பாளர் குழுக்கூட்டங்களின் எண்ணிக்கை- 12
- உலக ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையால் 2022 ஆம் ஆண்டிற்காக வெளியிடப்பட்ட தடைசெய்யப்பட்ட பொருட்பட்டியலை வர்த்தமானியில் பிரசுரித்தல் மற்றும் பாராளுமன்ற அனுமதியைப் பெறுவது தொடர்பான ஏற்பாடுகளைச் செய்தல்.
- தடைசெய்யப்பட்ட ஊக்குப் பதார்த்தம் சம்பந்தமான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின்போது அவற்றின் சட்டப்பின்னணி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- உலக ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சட்டத்திற்கு அமைவாக இலங்கையில் ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

2023 க்கான இலக்குகள்

- மாதாந்த பணிப்பாளர் குழுக்கூட்டங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் அறிக்கைகளை முறையாகத் தயாரித்தல்.
- ஊக்குப்பதார்த்தப் பாவனை உறுதிசெய்யப்பட்ட அனைத்து வீர வீராங்ணைகளுக்குமான ஆரம்பகட்ட விசாரணைகள் , ஒழுக்காற்று மற்றும் மேன்முறையீட்டு விசாரணைகளை நிறைவுசெய்தல்.
- ஊக்குமருந்து பாவனை உறுதிசெய்யப்பட்டது முதல் இறுதி தீர்ப்பு வழங்கப்படும் வரை ஒவ்வொரு வீரரோடும் தொடர்புடைய ஒருங்கிணைப்பு நடைமுறைகளை மேற்கொள்ளல் மற்றும் கோப்புகளை பராமரித்தல்.
- ஒழுக்காற்று மற்றும் மேன்முறையீட்டு விசாரணைகளுக்கான தீர்ப்புகள் முறையாகத் தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே தொடர்பாடல் செய்தல்.
- உலக ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை தொடர்பான சட்ட நிலவரங்களின் புதுப்பிப்புகளுக்கு அமைய இலங்கையில் தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தம் தொடர்பான சட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- உலக ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையால் வெளியிடப்பட்ட தடைசெய்யப்பட்ட பொருட்பட்டியலை வர்த்தமானியில் பிரசுரித்தல் மற்றும் பாராளுமன்ற அனுமதியைப் பெறுவது தொடர்பான ஏற்பாடுகளைச் செய்தல்.
- குதிரையேற்றம் மற்றும் குதிரைப்பந்தயங்களுக்கான சர்வதேச சம்மேளனத்தினால் 2023 ஆம் ஆண்டுக்காக வெளியிடப்பட்ட தடைசெய்யப்பட்ட பொருட்பட்டியலை வர்த்தமானியில் பிரசுரித்தல் மற்றும் பாராளுமன்ற அனுமதியைப் பெறுவது தொடர்பான ஏற்பாடுகளைச் செய்தல்.
- தடைசெய்யப்பட்ட ஊக்குப் பதார்த்தம் சம்பந்தமான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின்போது அவற்றின் சட்டப்பின்னணி தொடர்பான விழிப்புர்வை ஏற்படுத்தல்
- 2023 ஆண்டுக்காக உலக ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையால் வெளியிடப்பட்ட தடைசெய்யப்பட்ட பொருட்பட்டியலை வர்த்தமானியில் பிரசுரித்தல் மற்றும் பாராளுமன்ற அனுமதியைப் பெறுவது தெடர்பான ஏற்பாடுகளைச் செய்தல்.

அமலாக்கம் மற்றும் செயற்படுத்தல் பிரிவு (2022 ஆம் ஆண்டு)

அமலாக்கம் மற்றும் செயற்படுத்தல் பிரிவால் 2022 ஆம் ஆண்டில் காவல்துறை அதிகாரிகளுக்கு 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டம் தொடர்பான 06 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. அவ்வாறே அமலாக்கம் மற்றும் செயற்படுத்தல் பிரிவின் விசேட முறைப்பாடுகள் பிரிவுக்கு இதுவரை 09 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன (2022 ஆம் ஆண்டின் இறுதிக்குள்). பாடசாலை மெய்வல்லுனர் போட்டியோடு இணைந்து சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் தடைசெய்யப்பட்ட பொருட்கள் மற்றும் முறைகளின் பாவனை தொடர்பான விசேட முறைப்பாடுகள் பெறுவதற்கான மற்றும் விழிப்புணர்வு வழங்குவதற்கான முகாமும் (Outreach Booth) நிறுவப்பட்டது.

2022 ஆம் ஆண்டுக்கான அமலாக்கம் மற்றும் செயற்படுத்தல் பிரிவின் முன்னேற்றம்

நிகழ்ச்சி	நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை
நடாத்தப்பட்ட பயிற்றுவிப்பு நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	06	1907
விழிப்புணர்வு வழங்குவதற்கான முகாம் (Outreach Booth) மற்றும் பயிற்றுவிப்பு நிகழ்ச்சிகள்	01	1000 வரை
விசேட முறைப்பாடுகளின் எண்ணிக்கை	07	07
Internal Initials Reviews	07	07

அமலாக்கம் மற்றும் செயற்படுத்தல் பிரிவால் 2022 ஆம் ஆண்டிற்கான முதல் விழிப்புணர்வு நிகழ்ச்சியாக 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி 11 ஆம் திகதி களுத்துறை காவல்துறைப் பயிற்சிக் கல்லூரியின் காவல்துறை அதிகாரிகள் 61 பேருக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியானது நடாத்தப்பட்டது.





இரண்டாவது விழிப்புணர்வு நிகழ்ச்சியாக 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08 ஆம் திகதி கண்டி குண்டசாலை காவல்துறைப் பயிற்சிக் கல்லூரியின் காவல்துறை அதிகாரிகள் 165 பேருக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியானது நடாத்தப்பட்டது.





மூன்றாவது விழிப்புணர்வு நிகழ்ச்சியாக 2022 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 02 ஆம் திகதி கண்டி குண்டசாலை காவல்துறைப் பயிற்சிக் கல்லூரியின் காவல்துறை அதிகாரிகள் 330 பேருக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியானது நடாத்தப்பட்டது.





நான்காவது விழிப்புணர்வு நிகழ்ச்சியாக 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி எல்பிட்டிய காவல்துறைப் பயிற்சிக் கல்லூரியின் காவல்துறை அதிகாரிகள் 55 பேருக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியானது நடாத்தப்பட்டது.





ஐந்தாவது விழிப்புணர்வு நிகழ்ச்சியாக 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதி மகியங்கணை காவல்துறைப் பயிற்சிக் கல்லூரியின் காவல்துறை அதிகாரிகள் 632 பேருக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியானது நடாத்தப்பட்டது





ஆறாவது விழிப்புணர்வு நிகழ்ச்சியாக 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16 ஆம் திகதி பொறலந்தை காவல்துறைப் பயிற்சிக் கல்லூரியின் காவல்துறை அதிகாரிகள் 664 பேருக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியானது நடாத்தப்பட்டது





பாடசாலை மெய்வல்லுனர் போட்டியோடு இணைந்து சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02 முதல் 06 வரை சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் தடைசெய்யப்பட்ட பொருட்கள் மற்றும் முறைகளின் பாவனை தொடர்பான விசேட முறைப்பாடுகள் பெறுவதற்கான மற்றும் விழிப்புணர்வு வழங்குவதற்கான முகாமும் (Outreach Booth) நிறுவப்பட்டது. இங்கு அனைத்து விளையாட்டுகளையும் உள்ளடக்கிய 1000 க்கும் மேற்பட்ட விளையாட்டு வீர வீராங்கணைகளுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டது.








இதன்படி, இவ்வாண்டில் விசேட முறைப்பாடுகள் மற்றும் தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தம் தொடர்பான 07 உள்ளக விசாரணைகள் நடாத்தப்பட்டன. இவ்வாண்டில் விசேட முறைப்பாடுகள் கீழ்வரும் விளையாட்டுக்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்றுள்ளன.

மெய்வல்லுனர் போட்டி	01
சைக்கிளோட்டம்	03
பளு தூக்குதல்	02
கிரிக்கட் முறைகேடுகள்	01

2023 ஆண்டுக்கான அமலாக்கம் மற்றும் செயற்படுத்தல் பிரிவின் வருடாந்த திட்டம் (Annual Plan)

பயிற்றுவிப்பு நிகழ்ச்சிகள்(Training Programs)	05
விழிப்புணர்வுக்கான முகாம்கள் (Outreach Booth) Training programs	04
விசேட முறைப்பாடுகள் பிரிவு	12
Internal Initials Reviews	04

2023 ஆம் ஆண்டில் 05 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்படுவதோடு 04 விழிப்புணர்வு முகாம்கள் (Outreach Booth) பயிற்றுவிப்பு நிகழ்ச்சிகள் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாண்டில் காலாண்டிற்கு 03 விசேட முறைப்பாடுகள் என்றவகையில் 12 முறைப்பாடுகளின் விசாரணைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதோடு இவ்வெண்ணிக்கை இதனைவிட அதிகரிக்கலாம். அவ்வாறே உள்ளக விசாரணை அறிக்கைகள் காலாண்டுக்கு 01 என்றவகையில் வருடத்திற்குள் 04 நடாத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டுள்ளது அத்தோடு இவ்வெண்ணிக்கையும் வேறுபடலாம்.


ஊக்குப்பதார்த்தப் பாவனை உறுதிபடுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் அவ் விசாரணை தொடர்பான உள்ளக விசாரணை மேற்கொள்ளப்படவேண்டியதற்கான அவசியத்தின் அடிப்படையில் இவ் உள்ளக விசாரணை அறிக்கையானது குறித்த குழுக்களுக்கு சமர்ப்பிக்கப்படவேண்டும்.

பரிசோதனைப் பிரிவு

1. LC/MS/MS உபகரணத்தின் performance qualification test மற்றும் அது தொடர்பான பயிற்சி Shimadzu application specialist வரவழைக்கப்பட்டு வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டது.



❖ Shimadzu விசேட நிபுணரால் LC/MS/MS உபகரணத்தில் காணப்பட்ட தொழிநுட்பக் கோளாறுகளை நிவர்த்திசெய்வதற்கான முயற்சிளை மேற்கொள்ளல்.



❖ ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் Shimadzu விசேட நிபுணரால் பயிற்றுவிக்கப்படுதல்.



❖ LC/MS/MS உபகரணத்தைப் பயன்படுத்தி சிறுநீர் மாதிரி பகுப்பாய்வுக்கான மாதிரிகளை தயாரித்தல்

2. LC/MS/MS உபகரணத்தின் performance test ஒன்றின் தரமானது உள்நாட்டு நிபுணர்கள் உள்ளடங்கிய தேசிய நிபுணர்கள் உள்ளடங்கிய குழுவால் உறுதிபடுத்தப்பட்டது.

- வைத்தியர் உத்பலி மன்னபெரும, மருந்தியல் தொடர்பான விரிவுரையாளர், கொழும்பு பல்கலைக்கழகம்.





- திருமதி கமனி பெரேரா, சிரேஷ்ட அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர்.


- வைத்தியர் தனுஷா தம்பரவிட்ட, மருந்தியல் தொடர்பான விரிவுரையாளர், கொழும்பு பல்கலைக்கழகம்.



- பேராசிரியர் லால் ஜயக்கொடி.

❖ LC/MS/MS உபகரணத்தின் செயல்திறன் மதிப்பீட்டுக்குழு கலந்துரையாடல்.


3. 2014 முதல் 2020 வரை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிமீறல்கள் தொடர்பான பின்னணி பற்றிய கற்கை மற்றும் அவ்வராய்ச்சி தொடர்பான Abstract அறிக்கையை சர்வதேச மாநாட்டில் வெளியிடுதல்.



❖ விளையாட்டு விஞ்ஞானம் தொடர்பான 6 வது சர்வதேச மாநாட்டில் வாய்மூல வெளியீடு

4. உள்ளூர் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களின் போசணை தொடர்பான விழிப்புணர்வு தொடர்பான பகுப்பாய்வு தொடர்பாக திட்டமிடப்பட்ட ஆராய்ச்சிக்கான தரவு சேகரிப்பை நிறைவுசெய்தல்.

5. சர்வதேச அறிவியல் தொடர்பான அமர்வில் இலங்கையில் உள்ள பல்கலைக்கழக விளையாட்டு வீர வீராங்கணைகளின் உணவுக்குறைநிரப்பிகளின் Abstract அறிக்கையை வெளியிடுதல்.



World Academy of Science, Engineering and Technology
International Journal of Sport and Health Sciences
Vol:16, No:03, 2022

Prevalence of Dietary Supplements among University Athlete Regime in Sri Lanka: A Cross-Sectional Study

Authors : S. A. N. Rashani, S. Pigera, P. N. J. Fernando, S. Jayawickema, M. A. Niriella, A. P. De Silva


Abstract : Dietary supplement (DS) consumption is drastically trending among the young athlete generation in developing countries. Many athletes try to fulfill their nutrition requirements using dietary supplements without knowing their effects on health and performance. This study aimed to assess the DS usage patterns of university athletes in Sri Lanka. A self-administered questionnaire was employed to collect data from state university students representing a university team, and a sample of 200 respondents was selected based on a stratified random sampling technique. Incomplete questionnaires were omitted from the analysis. The data were analyzed using IBM SPSS statistics for Windows version 25. The level of significance was set at $p<0.05$ in the data analysis. The prevalence of DS was 48.2% (n= 94), with no significant association between gender and DS intake. Protein (15.9%), vitamin (14.9%), sports drinks (12.8%), and creatine (8.2%) were the most consumed DS by students. Weightlifting (85.0%), football (62.5%), rugby (57.7%), and wrestling (40.9%) players showed higher DS usage among other sports. Coaches were reported as the most frequent person who was advised to use DS (43.0%). Students who won interuniversity games showed significantly low DS intake ($p = 0.002$) compared to others. Interestingly, DS use was significantly affected by the season of use ($p = 0.000$), pointing out that during competition and training seasons (62.4%) was the most frequent use. The pharmacy (27.0%) was the commonest place to buy DS. Students who used nutrient-dense meal plans during the training and competition period still showed a 61.0% tendency to consume DS. Most claimed reason to use DS was to increase energy and strength (29.0%). A majority reported that they used DS for less than one month (35.5%), while the second-highest duration was over three years (17.2%). Considering body mass index (BMI), healthy weight students showed 71.0% DS prevalence. DS prevalence was moderate among Sri Lankan university students, highlighting that the highest DS use was during competition and training seasons. Moreover, it emphasizes the need for nutrition and anti-doping counseling in the Sri Lankan university system.

Keywords : athlete, dietary, supplements, university
Conference Title : ICSS 2022 : International Conference on Sport Science
Conference Location : Sydney, Australia
Conference Dates : March 28-29, 2022

6, No:03, 2022 publications.waset.org/abstracts/145242/pdf

❖ விளையாட்டு விஞ்ஞானம் தொடர்பான சர்வதேச மாநாட்டில் வாய்மூல வெளியீடு

6. இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையால் நடாத்தப்படும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் பகுப்பாய்வு மற்றும் அதனூடாக இலங்கையின் விளையாட்டில் ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிராக ஏற்படுத்தப்படும் விளைவு தொடர்பான கற்கையின் Abstract அறிக்கையை அறிவியல் மாநாட்டில் வெளியிடுதல்.



7th International Conference of Sport Science – AESA 2023

An Evaluation of Anti-Doping Education program of Sri Lanka Anti -Doping Agency in preventing doping among athletes

SAN Rashani [*,1], S.Pigera[1] ,PNJ Fernando [1] ,S Jayawicrema[1], S Pilipitiya [3] ,AP De Silva[1,2]

[1]Sri Lanka Anti Doping Agency, [2]University of Kelaniya, [3] Institute of Sports Medicine


Background: This study was conducted to evaluate the anti-doping awareness program (ADAP) according to the knowledge of prohibited substances, doping rules, doping behavior and moral adjustment in preventing doping among Sri Lankan athletes.

Methods: Data was collected from 200 athletes. A questionnaire was used to collect data in pre, post and follow-up sessions. Knowledge of anti-doping rules and prohibited substances were measured as unintentional doping, while doping behavior and moral detachment were intentional doping measures. Participants were asked to respond on a Likert- type scale to determine athlete satisfaction. Results were statistically analyzed using non -parametric tests.

Results: A repeated measures ANOVA determined that doping knowledge score differed significantly between 3 time points ($F = 27.54$, $P < 0.000$). Post hoc analysis revealed knowledge score was significantly increased from pre to post (-6.65 (95% CI, -8.45 to -4.85), $p < .000$), and pre to follow up (- 4.265 (95% CI, -7.045 to -1.486), $p = .001$), but not from post to 3 months later (2.38 (95% CI, 0.38 to 4.38), $p = 0.014$).Moral affinity has significantly decreased from pre to post (0.01) but not significant changed in follow up. Doping behavior did not show significant change (0.264).

❖ விளையாட்டு அறிவியல் தொடர்பான 7வது சர்வதேச மாநாட்டில் சாராம்சமானது ஏற்றுக்கொள்ளப்பட்டு வெளியிடுவதற்கு அனுமதிக்கப்பட்டது.

7. உணவுக்குறைநிரப்பிகளின் பாவனையால் ஏற்படக்கூடிய உடநலப் பிரச்சினைகள் குறித்த ஆராய்ச்சின் முழுமையான ஆய்வறிக்கையை Asian Food Science இதழில் வெளியிடப்பட்டமை.



Asian Food Science Journal

21(5): 47-54, 2022; Article no.AFSJ.85801
ISSN: 2581-7752

Retrospective Study on Health Impact of Dietary Protein, Vitamin and Electrolyte Supplementation: A Pilot Study

P. N. J. Fernando [a*], S. Pigera [a], S. A. N. Rashani [a], S. J. Jayawickrema [a] and A. P. de Silva [a,b]

[a] Sri Lanka Anti-Doping Agency, Colombo, 01400, Sri Lanka.
[b] Faculty of Medicine, University of Kelaniya, Kelaniya, 11300, Sri Lanka.

Authors' contributions

This work was carried out in collaboration among all authors. Author PNJF designed the study, did the literature search, wrote protocol, carried out the work, performed statistical analysis, wrote the first draft of the manuscript. Author SP designed the study and carried out the work. Author SANR performed statistical analysis. Authors SJJ carried out the work and edited the first draft of the manuscript. Author APS was supervisor of the piece of work. All authors read and approved the final manuscript.

Article Information

DOI: 10.9734/AFSJ/2022/v21i530430

Open Peer Review History:
This journal follows the Advanced Open Peer Review policy. Identity of the Reviewers, Editor(s) and additional Reviewers, peer review comments, different versions of the manuscript, comments of the editors, etc are available here: https://www.sdiarticle5.com/review-history/85801

Original Research Article

Received 12 February 2022
Accepted 21 April 2022
Published 28 April 2022

❖ Asian Food Science Journal இதழில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆராய்ச்சியின் முழுமையான ஆய்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளது



நிலைபெறுதகைமை பற்றிய அறிக்கை

“இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது பொறுப்புணர்ச்சியுடன் கூடிய வளர்ச்சிக்காக அர்ப்பணிப்போடு செயற்பட்டு வருவதோடு அதன் நிறுவன நோக்கங்களினூடாக இலங்கை விளையாட்டு வீரர்களுக்கு முறையான நிரந்தரமான மற்றும் நிலைபெறுதகைமைக்கான மதிப்பை உருவாக்குகின்றது.”

இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது பிரதானமாக நிலைபெறுதகைமையை முன்னெடுத்துச்செல்லும் நிறுவனமாக விளங்குகின்றது. ஆரம்பம் முதலே இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது அதன் நேரடி பங்குதாரர்களின் நலனைக் கருத்திற்கொண்டு விளையாட்டு வீரர்களின் ஒட்டுமொத்த நீண்டகாலத் தேவைகள் மற்றும் ஒழுக்கவியலோடு முரண்படுவதில்லை என்பதை உறுதியாக நம்புகின்றது. குழுவின் நிலைபெறுதகைமை பற்றிய அறிக்கையில் அதன் சுயவிபரம், நிலைபெறுதகைமைக்கான உத்திகள், பொருளாதார ரீதியான பொறுப்பு, சமூக ரீதியான பொறுப்பு மற்றும் சுற்றுச்சூழல் ரீதியான பொறுப்பு போன்றவை அடங்கும்.

இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது பிரதானமாக நிலைபெறுதகைமையை முன்னெடுத்துச்செல்வதற்காக பொறுப்புடன் கூடிய வளர்ச்சிக்காக அர்ப்பணிப்போடு செயற்பட்டு வருவதோடு அதன் சுய நோக்கங்களை அடைவதன் மூலமாக விளையாட்டு வீர்ர்களுக்கு முறையே நிரந்தரமான மற்றும் நிலைபெறுதகைமைக்கான மதிப்பை உருவாக்குகின்றது. சமூக, சுற்றாடல் மற்றும் பொருளாதார ரீதியான பொறுப்புகளை முன்னெடுத்துச்செல்வதற்காக இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை மேற்கொண்ட நடவடிக்கைகளை இவ்வறிக்கை எடுத்துக்காட்டுகிறது. இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையினது சமூக பொறுப்பிற்கு முகவராண்மையில் விளையாட்டு வீர வீராங்கணைகள் மற்றும் இலங்கைப் பிரஜைகளின் பாதுகாப்பிற்காக மேற்கொள்ளப்பட்ட பொறுப்புமிக்க நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. சுற்றாடல் ரீதியான பொறுப்பை நிறைவேற்றுவதற்காக இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையினது செயற்பாடுகளின் சுற்றாடல் ரீதியான தாக்கத்தை கண்காணித்து சுற்றுச்சூழலுக்கு உகந்த முதலீடுகளை செய்கின்றது. பொருளாதார ரீதியான பொறுப்பு என்பது வெளிப்படையான மற்றும் சமநிலையான நிர்வாக கட்டமைப்பாக மாற்றப்படுகின்றது.

எமது நன்னெறிகள்

எமது நிறுவனத்தைச் சார்ந்த அர்ப்பணிப்புடன் கூடிய மற்றும் ஆர்வம் மிக்க பணியாளர்களைப் பொறுத்தவரை அவர்கள் எமக்கு பாரியளவிலான ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர் . ஆகையால் நாமும் அதில் ஒரு அங்கத்தவர் என அவர்கள் பெருமைப்படக்கூடியவாறானதொரு சூழலை உருவாக்குவதற்கு நாம் அரும்பாடுபடுகின்றோம் .எமது பணியாளர்களின் திருப்தியைப் பொறுத்தே எமது நிறுவனத்தின் வெற்றி தங்கியுள்ளது என்பதனை நாம் நன்கு புரிந்துகொண்டதால், எமது பணியாளர்களின் சிறப்புத்தன்மையையும் வெற்றியையும் ஊக்குவிப்பதற்காக பயிற்சி மற்றும் தொடர்ச்சியான கல்வி போன்றவற்றிக்கான சந்தர்ப்பத்தை வழங்குவதனூடாக எமது பணியாளர்களுக்காக முதலீடு செய்கின்றோம்.

சுற்றுச்சூழல் சார்ந்த பொறுப்பு

சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்பை குறைப்பதற்காக எம்மால் எடுக்கப்பட்ட முயற்சிகள் வெற்றியடைந்துள்ளன. இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை பணியாளர்களுக்கான முழுமையான பயிற்சி, நவீன தொழிநுட்பம் மற்றும் பங்குதாரர்களோடு இணைந்து பணியாற்றல் போன்றவற்றினூடாக பயனுள்ள ஆதரவு சேவையை வழங்குவதற்கான பாதையை வகுக்கின்றது. செயலியின் அறிமுகமானது இதற்கான சான்றாகும். டிஜிட்டல் மயமாக்கல் மூலம் இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை விளையாட்டு வீர வீராங்கணைகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக அதிகளவிலான செயலிகள் மற்றும் இணையத்தள சேவைகளை அறிமுகப்படுத்துவதனூடாக பூமியில் காபன் சுவடுகளை குறைப்பதை இலக்காகக் கொண்டுள்ளது. சுற்றுச்சூழல் சார்ந்த தாக்கம் குறித்த இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காகவும் பணியாளர்களிடையே பசுமை விழிப்புணர்வை அதிகரிக்கவும் நாம் உத்தேசித்துள்ளோம். இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது நிலைபெறுதகைமைக்கான மதிப்பை நிர்மாணிப்பதனூடாக அர்ப்பணிப்புடன் கூடிய அபிவிருத்தியை நோக்கி கவனஞ்செலுத்தி வருகின்றது. இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது , நிறுவனம் சார்ந்த முயற்சிகளின் விளைவாக சுற்றுச்சூழலுக்கு ஏற்படக்கூடிய தாக்கத்தினை கண்காணித்து அதன் சுற்றுச்சூழல் சார்ந்த பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக வலுச்சக்தி சேமிப்பிலும் முதலீடு செய்கின்றது.

எமது சமூக பொறுப்பு

எமது நிறுவனம் சார் சமூக பொறுப்பு தொடர்பான கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு எம்மை மதிப்புமிக்க சமூகத்தினராக அங்கீகரிப்பதானது இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையாகிய எமக்கு அவசியமாகும். அதனால் அர்த்தமுள்ள மற்றும் நீண்டகால கூட்டாண்மை மூலம் விளையாட்டு வீர வீராங்கணைகளுக்கு மற்றும் சமூகத்திற்கு ஒத்துழைப்பை வழங்குவதற்கு மற்றும் சுற்றுச்சூழல் சார்பாக பயன்தரு வகையில் நிறுவன நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை கவனஞ்செலுத்திவருகிறது.

மனித வளம்

சிறந்த வணிக நடைமுறைகளை மேம்படுத்துவதில், நீடித்த வாடிக்கையாளர் உறவை கட்டியெழுப்புவதில் எமது பணியாளர்களின் முக்கிய பங்களிப்பை நாம் அங்கீகரிக்கின்றோம் .நாம் எமது ஊழியர்களுக்கு மிகுந்த மதிப்பளிப்பதோடு அவர்களால் வழங்கப்படும் விலைமதிப்பற்ற பங்களிப்புகளுக்கு எமது பாராட்டுகளை வெளிப்படுத்துவதற்காக நவீன,கூட்டு மற்றும் கவர்ச்சிகரமான பணியிடத்தை நிர்மாணித்து வழங்கியுள்ளோம்.

பணியாளர் குழு மேம்பாட்டுக்கான நோக்கங்கள்

- வேலை மற்றும் தொழில் வாய்ப்புகளை உருவாக்கி ஊக்குவித்தல்.
- பணியாளர் குழாமைத் திட்டமிடல் மற்றும் திறன் விருத்திக்கான திட்டங்களை மேம்படுத்தல்,தரமான ஆட்சேர்ப்பு மற்றும் தக்கவைப்புக்கான நடவடிக்கைகள், தலைமைத்துவம் மற்றும் பிரதியீட்டாளர்கள் தொடர்பான திட்டங்களை மேம்படுத்தல் மற்றும் தொடரச்சியாக கல்வியை வழங்குவதனூடான தொடர்ச்சியான அபிவிருத்திசெய்தல்.
- எமது பணியாளர்கள் பலப்படுத்தப்படுவதோடு அவர்களுடைய சாதனைகளுக்கான ஊக்கம் வழங்கப்படுவதையும் உறுதிப்படுத்தல்.

- நிறுவனத்தின் மூலோபாய திசை தொடர்பாக எமது பணியாளர்கள் விழிப்புணர்வைப் பெற்றிருப்பதனையும் அது தொடர்பாக அறிந்திருப்பதனையும் உறுதிபடுத்தல்

நிறுவன நிர்வாகம்

நிறுவன நிர்வாக அமைப்பானது இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் முடிவெடுக்கும் நடைமுறைகளை வரையறுக்கின்றது. அதேவேளை நிறுவனத்தின் நீண்டகால நோக்கங்கள் மற்றும் மூலோபாயத்திட்டங்கள் போன்றவற்றை வழிநடத்துகின்றது. நிறுவன நிர்வாக மாதிரியானது இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் பல்வேறு மட்டங்களுக்கிடையிலான, விசேடமாக நிர்வாக மட்டங்களுக்கிடையிலான அதாவது பணிப்பாளர் குழு மற்றும் நிறைவேற்று முகாமைத்துவ மட்டங்களுக்கிடையே அதிகாரம் மற்றும் பொறுப்புகளின் பகிர்வை சுருக்கமாகக் கூறுகின்றது. பணிப்பாளர் குழுவானது நிறுவனக்கொள்கையை வகுப்பதோடு தமது நிறுவனத்தின் முறையான செயற்பாட்டிற்கு பொறுப்புக்கூறவேண்டிய நபர்களாகிய பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் ஏனைய நிறைவேற்று அதிகாரிகளுக்கு மூலோபாய வழிகாட்டுதலை வழங்குகிறது.

இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச்சட்டத்தினால் நிர்வகிக்கப்படுகின்றது. அச்சட்டத்தின் 14(i) ஆம் வாசகத்தின் கீழ் பணிப்பாளர் குழுவின் கட்டமைப்பு கீழ்வருமாறு ஆகும்.

(அ) கீழே குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகபூர்வ அதிகாரங்களால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள்:

i. விளையாட்டுத்துறை சம்பந்தமாக பொறுப்புவகிக்கும் அமைச்சருக்கான அமைச்சின் செயலாளரால் பரிந்துரைக்கப்படும் சிரேஷ்ட உதவிச்செலாளர் பதவிக்குக் குறையாத பதவியை வகிக்கும் உத்தியோகத்தர்;
ii. விளையாட்டுத்துறை அபிவிருத்தி – பணிப்பாளர் நாயகம்;
iii. விளையாட்டு வைத்திய நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம்;
iv. தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தின் பணிப்பாளர்;

(ஆ) அமைச்சரால் நியமிக்கப்படுபவர் சட்டம், விளையாட்டுத்துறைசார் மருத்துவம், மற்றும் விளையாட்டு விஞ்ஞானம் ஆகிய துறைகளில் நிபுணத்துவம் பெற்ற (இனிமேல் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" என குறிப்பிடப்படும்) ஆறு உறுப்பினர்களைக் கொண்டிருக்கவேண்டும்.

அமைச்சரால் குழுவின் தலைவர் நியமிக்கப்படுவதுடன், குழுவின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தராகவும் தலைவர் செயற்படுவதோடு அவர் குழுவின் செயற்பாடுகள் தொடர்பான நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்திற்கு பொறுப்புடையவராவார்.

பணிப்பாளர் குழுவின் கடமைகள்

அரசாங்கக் கொள்கையின் பிரகாரம் நிறுவனத்தின் வினைத்திறனான நிர்வாகத்திற்கு பணிப்பாளர் குழு பொறுப்பாகும். அனைத்து சட்டபூர்வமான மற்றும் முகாமைத்துவ ஒழுங்குமுறைகளின் தேவைப்பாடுகளுக்கிணங்க இது அமையவேண்டியதோடு, வளங்களின் பாதுகாப்பு, போதுமான கணக்குகளை பேணுதல் மற்றும் துல்லியமான அறிக்கையிடல் ஆகியவற்றை உறுதிசெய்வதன் மூலமாக இது அடையப்படவேண்டும்.

எனவே பணிப்பாளர் குழு பின்வருவனவற்றை உறுதிசெய்யவேண்டும்:

- அமைப்பின் மூலோபாய நோக்கங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்தல்.
- மூலோபாய நோக்கங்களை அடைவதற்கு தலைமைத்துவத்தை வழங்குதல்.
- பயன்தரு உள்ளக கட்டுப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவ அமைப்பு நடைமுறையில் இருப்பதை உறுதிசெய்தல்.
- நிறுவன முகாமைத்துவ நடவடிக்கைகளை பயனுள்ள வகையில் கண்காணித்தல்.
- வழமையான அடிப்படையில் தேவைப்படும் நிதிசார் அம்சங்கள் மற்றும் வெளிப்பாடுகள் தொடர்பாக போதுமானளவு அறிக்கையிடல்
- வளங்கள் மற்றும் சொத்துக்களை பொறுப்புடன் பயன்படுத்தல்
- கணக்காய்வுக் குழு மற்றும் பிற குழுக்களை நியமித்தல்; மற்றும் நன்னெறிகளின் அமைப்பு மற்றும் நிறுவன நிர்வாக உத்தி போன்றவற்றை அறிமுகப்படுத்தல்
- உரிய கட்டளைகள்,வழிகாட்டுதல்கள் மற்றும் சுற்றறிக்கைகள் போன்றவற்றிற்கமைய அவர்களின் அனைத்து செயற்பாடுகளுக்கும் பொறுப்புக்கூறல்
- குறைந்தபட்சம் ஆண்டுக்கு ஒருமுறை அல்லது பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் மற்றும் சிரேஷ்ட நிர்வாக பணியாளர் குழுக்களை மதிப்பீடு செய்தல

பணிப்பாளர் குழுக்கூட்டங்கள்

நிறுவன செயற்பாடுகள் மற்றும் பணிப்பாளர் குழுக்கூட்டங்களின் முடிவுகள் வரவுசெலவுத்திட்டம் மற்றும் சம்பந்தப்பட்ட நியமங்களுக்கமைய கண்டிப்புடன் மற்றும் தொடர்ந்து கண்காணித்தல். பணிப்பாளர் குழுவின் கவனம் முழுமையாக தேவைப்படும் ஏனைய விடயங்களுடன் முறையாக நிகழ்ச்சி நிரலொன்றைப் பின்பற்றல். பணிப்பாளர் குழுவானது மாதம் ஒருமுறை கூடுவதோடு தேவையேற்படும் போது சிறப்பு பணிப்பாளர் குழுக் கூட்டங்கள் நடாத்தப்படும்.

முகவராண்மையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள குழுக்கள்

1. நோய் தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்பு (டீ.யூ.ஈ) குழு
2. ஒழுக்காற்றுக் குழு
3. மேன்முறையீட்டுக் குழு
4. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு
5. பெறுகைக் குழு

முகாமைத்துவம்

குழுவின் அன்றாட செயற்பாடுகள் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தருடைய மற்றும் தலைமை முகாமைத்துவக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அபாயங்கள் மற்றும் வாய்ப்புக்கள் அடையாளம் காணப்படுவதையும் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படுவதையும் இலக்குகளை அடைவதற்கான வரவு செலவுத்திட்டங்கள் தயாரிக்கப்படுவதையும் இக்குழுக்கள் உறுதிசெய்கின்றன.

இடர் முகாமைத்துவ அறிக்கை

நிலைபெறுதகு இடர் முகாமைத்துவமானது நிறுவன செயற்பாடுகளில் பயனுள்ள இடர் முகாமைத்துவம் முக்கியகாரணியாகும். எமது செயற்பாடுகளில் ஆபத்து மற்றும் விளைவுகளுக்கிடையில் உரிய சமநிலையை உருவாக்குவதற்கு மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் எமது வளர்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்கு உதவும் வகையில் இடர் முகாமைத்துவ திறன்களை தொடர்ச்சியாக மேம்படுத்த நாம் முயற்சிக்கின்றோம். இடர் முகாமைத்துவமானது செயற்பாட்டுக் கட்டமைப்பின் பிரதான அங்கமாகும். நாம் எதிர்கொள்ளத் தயாராக இருக்கும் இடர் மட்டத்தினுள் இடர் வெளிப்பாட்டை நிர்வகிப்பதன் மூலம் வருவாய் மற்றும் மூலதனத்தில் பாதகமான ஏற்ற இறக்கங்களை கட்டுப்படுத்த முயல்கிறோம்.

அபாயங்களை அடையாளங்காணுதல் மற்றும் அவற்றை குறைப்பதற்குப் பொறுப்பான உத்தரவாத அணுகுமுறையானது முகாமைத்துவ அமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இடர் விழிப்புணர்வு நடைமுறைகளை ஆதரிக்கும் மற்றும் அதன்மூலம் இடர் அடிப்படையிலான முடிவெடுப்பதனை ஆதரிக்கும் வலுவான இடர் மேலாண்மை கலாச்சாரத்தை உருவாக்குவதே எமது முதன்மையான கவனஞ்செலுத்தப்படும் காரணியாகும். நீண்டகால நிலைத்தன்மையை உறுதிசெய்வதற்காக எமது இடர் உத்திகளை மேலும் மேம்படுத்துவோம்.

இடர் முகாமைத்துவ உத்திகள், விசேட பங்குதாரர்கள், முகாமையாளர்கள் மற்றும் பணிப்பாளர் குழுவிற்கான பின்னுட்ட பொறிமுறையாக செயற்படுகிறது. நிறுவனத்திற்கான நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்பாடுகள், அமைப்புகள் மற்றும் சேவைகளுக்கான விழிப்புணர்வுடன் கூடிய முடிவெடுப்பதற்கான மூலோபாய மையமாக அதற்குக் கிடைக்கப்பெறும் நிலையானது தனித்துவமானதாகும். இது கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரணிகளினூடான அணுகுவதற்காக மூலோபாய மற்றும் நிகழ்ச்சித் திட்டமிடல் , கருத்திட்ட முகாமைத்துவத்திற்கு மற்றும் நிகழ்ச்சித்திட்ட செயற்பாட்டு மட்டங்களுக்கு நிலையான அணுகலை வழங்குகிறது:

- நிகழ்ச்சித்திட்ட செயற்பாடுகள் மற்றும் அலகுகள் முழுவதற்குமான அபாயங்கள் குறித்த பொதுவான விழிப்புணர்வை வழங்குதல்.
- மேம்படுத்தப்பட்ட முன்னுரிமைகளை வகுத்தல் மற்றும் முடிவெடுப்பதற்கு வசதியாக நிர்வாகத்திற்கு தொடர்ச்சியான இடர் மதிப்பீட்டினை வழங்குதல்.
- பணியாளர்களின் விழிப்புணர்வு மற்றும் முகாமைத்துவப் பொறுப்புகளை மேம்படுத்தலின்போது இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது கீழே குறிப்பிடப்பட்டுள்ள விசேட அபாயங்களுக்கு உட்பட்டுள்ளது.

நிதிசார் இடர்

திறனற்ற பணப்புழக்க முகாமைத்துவம் மற்றும் நிதித் தகவல் தொடர்பான இடர்கள், நிறுவனத்தின் உற்பத்தித் திறனைக் குறைக்கலாம். நிறுவனம் முழுதும் செலவுக்கட்டுப்பாட்டு உத்திகளை ஒருங்கிணைத்தல் போன்ற நிதி இடர் முகாமைத்துவ மூலோபாய நடைமுறைகளை பயன்படுத்துகிறது.

செயற்பாட்டு இடர்

செயற்பாட்டு இடர்களில் கணினி அமைப்புகளில் ஏற்படக்கூடிய கோளாறுகள்,தனிநபர்களால் ஏற்படக்கூடிய தவறுகள், குற்றவியல் செயற்பாடுகள் அல்லது உள்ளக அமைப்புகளின் செயலிழப்பு போன்றவை அடங்கும். இத்தகைய சூழ்நிலைகள் நுகர்வோர் நம்பிக்கைக்கு மற்றும் நிறுவனத்தின் நற்பெயருக்கு கலங்கத்தையும் ஏற்படுத்தக்கூடும். செயற்பாட்டு இடர்களை குறைப்பதற்காக, உள்ளகக் கட்டுப்பாடுகளை தொடர்ந்து மேம்படுத்தி வருகின்றது. நிறுவனம் சார் இடர்களால் ஏற்படக்கூடிய ஆபத்துகளை குறைப்பதற்காக முகாமைத்துவத்தினால், செயற்பாட்டு அலகுகள் மற்றும் திட்டச் செயற்பாடுகளின் வழமையான இடர் மதிப்பீடுகளை செய்கின்றது.

சட்டரீதியான இடர்கள்

நிறுவனத்திற்கு எதிராக எடுக்கப்படும் எதிர்கால சட்டரீதியான நடவடிக்கைகளிலிருந்து பாதுகாத்துக்கொள்ளத் தவறும் பட்சத்தில் சட்டரீதியான பாதிப்புகள் எற்படுவதற்கான அபாயம் அதிகரிக்கின்றது. இலங்கை அங்கீகாரம் பெற்ற சட்ட வல்லுனர்களின் ஆலோசனையைப் பெற்று, அத்தகைய ஆபத்துகளைக் குறைப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

தகவல் தொழிநுட்ப ரீதியான இடர்கள்

தகவல் தொழிநுட்ப அமைப்பின் மூலம் பெறப்படும் துல்லியமான மற்றும் உரிய காலப்பகுதிக்குரிய தகவல்கள் இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை செயற்பாடுகளின் முக்கிய அங்கமாக விளங்குகின்றது. அதன் தகவல் தொழிநுட்ப அமைப்பை மேம்படுத்துவதற்கான செயற்திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் அறிக்கை

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டிற்கான எமது அறிக்கையை வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

கணக்காய்வு குழுவின் கட்டமைப்பு

கணக்காய்வுக் குழுவானது கீழ்வரும் நிறைவேற்று அதிகாரமற்ற மூன்று(03) பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது.

1. திரு.எச்.எம்.எஸ்.தர்மவர்த்தன - தலைவர் (மேலதிகப்பணிப்பாளர், பொது முயற்சிகள் திணைக்களம்)
2. திரு.டப்ளியூ.ஏ.குலசூரிய உறுப்பினர் (மேலதிகச் செயலாளர், கட்டுப்பாட்டு, கி.பா.வி..உ.மே.இ. அமைச்சு)
3. வைத்தியர். லால் ஏக்கநாயக்க உறுப்பினர் (பணிப்பாளர் நாயகம், தே.வி.வைத்திய நிறுவனம்)

இக்கூட்டங்களில் பணிப்பாளர் நாயகம், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கலந்துகொள்ளவேண்டியது கட்டாயமாகும். கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் கணக்காய்வு உத்தியோகத்தர், கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் முதன்மை உள்ளக கணக்காய்வாளர் இக்குழுவின் பார்வையாளர்களாக கூட்டங்களில் கலந்துகொள்வர்.

கணக்காய்வு குழுவின் பொறுப்புகள்

தூய்மையான விளையாட்டை நிறுவுதல் மற்றும் நிறுவனத்தின் சொத்துக்களைப் பாதுகாத்தல் போன்றவற்றுக்கு வலுவான உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பானது நடைமுறைப்படுத்தப்படவேண்டும். நிதியமைச்சு மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களும் இக்குழுவால் பின்பற்றப்படுகின்றது. 2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்குள் கணக்காய்வு குழுவால் அதன் பிரதான பொறுப்புகள் தொடர்பாக மேற்கொண்ட செயற்பாடுகளின் சாராம்சம் பின்வருமாறு:

1.உள்ளக கணக்காய்வாளரால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தின்படி அவ்வப்போது மேற்கொள்ளப்படும் உள்ளகக் கணக்காய்வு தொடர்பான குறிப்பிட்ட காலப்பகுதிக்கான கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவேண்டும். இவ் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் நடைமுறையிலுள்ள அமைப்புகள் மற்றும் நடைமுறைகளில் உள்ள குறைபாடுகளை எடுத்துக்காட்டுவதோடு, பரிந்துரைகளை செயற்படுத்துவது பற்றி கலந்தாலோசித்த பின்னர், தேவையான சந்தர்ப்பங்களில் தற்போதுள்ள முறைகள் மற்றும் நடைமுறைகளின் மேம்பாடுகளைப் பரிந்துரைத்து முகாமைத்துவம் மற்றும் கணக்காய்வுக் குழுவிற்கு அவற்றின் முன்னேற்றம் குறித்து அறிக்கைப்படுத்தப்படுகின்றது. கணக்காய்வுக் குழுவானது உள்ளகக் கணக்காய்விலிருந்து முறையான அறிக்கைகளை அவ்வப்போது பெறுவதோடு குறிப்பிட்ட காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு கணக்காய்வின் மூலமான கண்டுபிடிப்புகள் பற்றிய சாராம்சம் இவ்வறிக்கைகளில் உள்ளடக்கப்படும். நிர்வாகம் தொடர்பான கருத்துக்களும் அதன் ஒரு பகுதியாவதோடு கணக்காய்வின் மூலமாக அவதானிக்கபட்ட சூழ்நிலைகளுக்கு வழிவகுத்த அடிப்படைக் காரணிகள் மற்றும் அத்தகைய சூழ்நிலைகள் மீண்டும் ஏற்படாமல் தடுக்க எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் ஆகியவற்றை இக்குழுவானது மதிப்பாய்வு செய்கிறது.

2.உள்ளகக் கணக்காய்வு மற்றும் அரச கணக்காய்வின் உதவியோடு, நிறுவனத்தின் செயற்பாடுகள் , நிதிக்கட்டுப்பாடுகள் மற்றும் செயற்திறன் மதிப்பீடு செய்யப்படுவதோடு அவற்றுக்கான செலவினங்கள்,வருவாய் செயலாக்கம் மற்றும் மூலதனச்செலவுகளுக்கான அனுமதி வழங்குவது தொடர்பான எல்லை நிர்ணயம், கையெழுத்திடும் அதிகாரம் கொண்ட அதிகாரிகள், தகவல் தொழிநுட்ப செயலிகளின் கட்டுப்பாடு மற்றும் மேம்பாடு, நிறுவன கட்டமைப்பு,கொள்கைகள்,பணிகளை ஒதுக்கீடு செய்தல் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும் மதிப்பாய்வுகளை உள்ளடக்கியுள்ளது. நிறுவன நிதிக்கூற்றின் காசுப்பாய்ச்சலானது தொடர்ந்து கண்காணிக்கப்பட்டது. இதன்போது கண்டறியப்பட்ட குறைபாடுகள், தேவையான மேம்பாடுகளுக்கான பரிந்துரைகளுடன் அறிக்கைப்படுத்தப்படும்.


நடாத்தப்பட்ட கணக்காய்வுக் குழு கூட்டங்களின் எண்ணிகை

2022 ஆம் ஆண்டிற்காக மூன்று(03) கூட்டங்கள் நடைபெற்றதோடு அதற்கான வருகைகள் பின்வருமாறு.

கணக்காய்வுக் குழு	வருகை	வருகை தராமை
திரு.எச்.எம்.எஸ்.தர்மவர்த்தன	4/4	இல்லை
திரு.டப்ளியூ.ஏ.குலசூரிய	4/4	இல்லை
வைத்தியர்.லால் ஏக்கநாயக்க	4/4	இல்லை
திரு.எச். ஜுட் பெரேரா	4/4	இல்லை
திருமதி.டி.எச்.கலங்சூரிய	4/4	இல்லை



திரு.எஸ்.ஐ.எம்.ரோசா
தலைவர்
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு



நிதி அறிக்கை

- நிதிக்கூற்று அறிக்கை
- நிதி செயல்திறன் அறிக்கை
- காசுப்பாய்ச்சல் அறிக்கை
- மூலதனப் பாய்ச்சல் அறிக்கை
- நிதிக்கூற்றுக் குறிப்புகள்
- சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை.
- நிர்வாகத்தின் கருத்து

இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை
நிதிக்கூற்று

	குறிப்பு	31ம் திகதி மார்கழி 2022	31ம் திகதி மார்கழி 2021
		(இலங்கை ரூபாய்களில் தரப்பட்டுள்ளது)	
சொத்துக்கள்			
நிலையான சொத்துக்கள்			
காணி,கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள்	1	260,487,075.24	210,455,133.22
மூலதனக் குறைவேலைகள்	2	-	60,211,400.00
		260,487,075.24	**270,666,533.22**
நடைமுறைச் சொத்துக்கள்			
இருப்புக்கள் இருப்புக்கள்	3	1,606,462.00	2,005,580.20
வருமதிகள்	4	1,739,028.00	1,296,100.00
முற்கொடுப்பனவு செலவினங்கள்	5	236,249.79	384,224.03
காசும் ஏனையவையும்	6	1,663,842.06	3,750,780.96
		5,245,581.85	**7,436,685.19**
மொத்தச் சொத்துக்கள்		**265,732,657.09**	**278,103,218.41**
மூலதனமும் பொறுப்புக்களும்			
நிதியிடல் :			
திறைசேரி நிதி	7	217,689,516.41	251,811,034.63
அமைச்சு நிதி	8	691,964.51	1,445,090.38
திரண்ட நிதியம்	9	8,633,057.43	6,314,053.91
மீள்மதிப்பீட்டுத் தொகை	10	23,502,228.35	2,547,085.96
		250,516,766.70	**262,117,264.88**
நடைமுறைப் பொறுப்புக்கள்			
கடன்கொடுத்தோர் மற்றும் நிறுத்திவைப்பு	11	11,382,665.80	12,300,559.94
திரண்ட செலவினங்கள்	12	1,211,855.06	1,228,036.09
மீளளிக்கப்படும் வைப்புக்கள்		40,000.00	40,000.00
ஊழியருக்கான பணிக்கொடை ஏற்பாடு	13	2,581,369.53	2,417,357.50
		15,215,890.39	**15,985,953.53**
		265,732,657.09	**278,103,218.41**

இலங்கை பொதுத்துறை கணக்கியல் நியமங்களுக்கு (Sri Lanka Public Sector Accounting Standards (SLPSAS)). அமைவாக நிதி அறிக்கைகள் தாரிக்கப்பட்டுள்ளன.

…….. ……

திரு.எச்.எம்.சீ.ஜி.தயாரத்ன
கணக்காளர்

வைத்தியர்.சீவலி ஜயவிக்ரம
பணிப்பாளர் நாயகம்

மேற்படி பணிப்பாளர் குழு சார்பாக கையொப்பமிடப்பட்ட நிதிக்கூற்றுக்களின் தயாரித்தலுக்கும் வெளிப்படுத்துவதற்கும் பணிப்பாளர்குழுவினரே பொறுப்புடையவர்கள்.

…….. ……..

திரு.டப்ளியூ.ஏ.குலசூரிய
பணிப்பாளர்

பேராசிரியர் அர்ஜுன டி சில்வா
பணிப்பாளர் நாயகம்

இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை (SLADA)

நிதிச்செயற்பாட்டுக் கூற்று

31ம் திகதி மார்கழி 2022 இல் முடிவடைந்தஆண்டுக்கான அறிக்கை	**குறிப்பு**	**2022**	**2021**
		(இலங்கை ரூபாய்களில் தரப்பட்டுள்ளது)	
திறைசேரி நிதியம்	7	92,737,518.22	64,474,387.26
அமைச்சு நிதி	8	753,125.87	753,122.50
ஏனைய வருமானங்கள்	14	2,319,003.52	1,849,020.00
மொத்த வருமானங்கள்		95,809,647.61	67,076,529.76
நிர்வாகச் செலவினங்கள்	15	(93,490,644.09)	(65,227,509.76)
ஆண்டிற்கான மொத்த (மிகைகள் / பற்றாக்குறைகள்)		**2,319,003.52**	**1,849,020.00**

இலங்கை ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை
31ம் திகதி மார்கழி 2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் அறிக்கை

	குறிப்பு	2022	2021
		(இலங்கை ரூபாய்களில் தரப்பட்டுள்ளது)	
தொழிற்பாட்டுச் செயல்களால் ஏற்பட்ட காசுப்பாய்ச்சல்			
தேறிய மிகை		2,319,003.52	1,849,020.00
செம்மையாக்கல்			
தேய்மானம்		32,926,436.17	17,511,392.06
திறைசேரி நிதி ஏற்பாடு	7	(92,737,518.22)	(64,474,387.26)
		(57,492,078.53)	**(45,113,975.20)**
மூலதனக் குறைவேலைபாடுகள்			
(அதிகரித்தல்) / (குறைவு) இருப்புக்கள்		399,118.20	(199,940.57)
(அதிகரித்தல்) / (குறைவு) சோதனை மூலமான வருமதிகள்		(442,928.00)	(605,060.00)
(அதிகரித்தல்)/(குறைவு) முற்கொடுப்பனவுச் செலவினங்கள்		147,974.24	(384,224.03)
(அதிகரித்தல்)/(குறைவு) மீளளிக்கப்பட்ட வைப்புக்கள்		-	(45,000.00)
(அதிகரித்தல்)/(குறைவு) ஊழியருக்கான பணிக்கொடை ஏற்பாடு	13	164,012.03	697,711.09
(அதிகரித்தல்)/(குறைவு) நிறுத்திவைக்கப்பட்ட நிதி		(917,894.14)	-
(அதிகரித்தல்)/(குறைவு) அட்டுறுச்செலவுகள்		(16,181.03)	33,405.43
		(665,898.70)	**(503,108.08)**
நடைமுறை மூலதனத்தின் மாற்றங்கள்		**(58,157,977.23)**	**(45,617,083.28)**
முதலீட்டு நடவடிக்கையிலிருந்து பெறப்பட்ட தேறியகாசு			
நிலையான சொத்துக்கொள்வனவு		(62,003,235.80)	(2,101,803.19)
மூலதனக் குறைவேலைகள்		60,211,400.00	-
திறைசேரி நிதி மீள் நிரப்பு		-	-
		(1,791,835.80)	**(2,101,803.19)**
நிதிச்செயற்பாடு மூலம் பெறப்பட்ட நிதி			
திறைசேரி நிதி		58,616,000.00	50,056,000.00
செயலாளர் - விளையாட்டுத்துறை அமைச்சு		(753,125.87)	(753,122.50)
		57,862,874.13	**49,302,877.50**
செயற்பாட்டிலிருந்து பெற்ற தேறியகாசு		**(2,086,938.90)**	**1,583,991.03**
ஆரம்ப காசுமீதி		**3,750,780.96**	**2,166,789.93**
இறுதி காசுமீதி		**1,663,842.06**	**3,750,780.96**

இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை (SLADA)
31.12.2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கான
மூலதன பாய்ச்சல் கூற்று

(இலங்கை ரூபாய்களில் தரப்பட்டுள்ளது)

	திறைசேரி நிதியம் ரூபாய்	அமைச்சக நிதியம் ரூபாய்	மறுமதிப்பீட்டு இருப்பு ரூபாய்	திரண்ட மிகை ரூபாய்	மொத்தம் ரூபாய்
01.01.2020 இல் உள்ளவாறான மீதி	**266,081,050.16**	**2,951,335.38**	**-**	**1,537,638.00**	**270,570,023.54**
வருடத்திற்கான தேறிய மிகை	71,711,000.00	-	-	-	71,711,000.00
மறுசீராக்கம் மற்றும் திறைசேரிக்கான ஒழுங்கமைப்பு	(71,562,628.27)	(753,122.50)	-	-	(72,315,750.77)
வருடத்திற்கான தேறிய மிகை	-	-	-	2,927,395.91	2,927,395.91
மீள்மதிப்பீட்டுக்கான ஒதுக்கீடு	-	-	2,547,085.96	-	2,547,085.96
31.12.2020 இல் உள்ளவாறான மீதி – மீள் குறிப்பிடப்பட்டுள்ளது	**266,229,421.89**	**2,198,212.88**	**2,547,085.96**	**4,465,033.91**	**275,439,754.64**
வருடத்திற்கான தேறிய மிகை	50,056,000.00	-	-	-	50,056,000.00
நிதியங்களுக்கான மறுசீராக்கம்	(64,474,387.26)	(753,122.50)	-	-	(65,227,509.76)
வருடத்திற்கான தேறிய மிகை	-	-	-	1,849,020.00	1,849,020.00
31.12.2021 இல் உள்ளவாறான மீதி	**251,811,034.63**	**1,445,090.38**	**2,547,085.96**	**6,314,053.91**	**262,117,264.88**
வருடத்திற்கான தேறிய மிகை	58,616,000.00	-	-	-	58,616,000.00
மீள்மதிப்பீட்டுக்கான ஒதுக்கீடு	(92,737,518.22)	(753,125.87)	-	-	(93,490,644.09)
வருடத்திற்கான தேறிய மிகை	-	-	-	2,319,003.52	2,319,003.52
மீள்மதிப்பீட்டுக்கான ஒதுக்கீடு	-	-	20,955,142.39	-	20,955,142.39
31.12.2022 இல் உள்ளவாறான மீதி	**217,689,516.41**	**691,964.51**	**23,502,228.35**	**8,633,057.43**	**250,516,766.70**

இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை
31ம் திகதி மார்கழி மாதம் 2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்று குறிப்புகள்

1 கணக்கீட்டு எண்ணக்கரு தொடர்பான அறிக்கைகள்

1.1 பொது

இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனமானது 2013 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 11ம் திகதி இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 2013 இல. 33 விளையாட்டுகளில் ஊக்கமருந்து பாவனைக்கெதிரான இணக்கப்பாட்டுச் சட்டத்திற்கமைய நிறுவப்பட்டுள்ளதுடன் நிறுவனத்தின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகமானது இல 363/12, சுகததாச விளையாட்டரங்கு- ப்ளொக் டீ, ஸ்டேடியம் பாரக்கிங் ரோட், சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை கொழும்பு – 14 இல் அமைந்துள்ளது.

1.1 .1 நோக்கங்கள்

அ) விளையாட்டிலிருந்து ஊக்குமருந்து பாவனையை பூண்டோடு அழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

ஆ) விளையாட்டுகளுடன் தொடர்புபட்ட ஊக்குமருந்து பயன்பாடு எதிர்ப்பு தொடர்பான துறைகள் மற்றும் உரிய ஆராய்ச்சி உட்பட முகவர் நிறுவனத்திற்கு சமமான செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஏனைய சர்வதேச அமைப்புக்களுடன் பரஸ்பர ரீதியில் பரிசோதனை செயற்பாடுகளை நிகழ்த்துவதற்கான ஊக்குவிப்பை வழங்குதல்.

1.1.2. கணக்கீட்டு நியமம் தொடர்பான உறுதியுரைக் கூற்று

நிறுவனத்தின் நிதிக்கூற்று அறிக்கைகளானது இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட பொது நிறுவனங்களுக்கான கணக்கீட்டு விதிகளுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

1.1.3. நிதிக்கூற்றுத் தயாரித்தலுக்கான அடிப்படை கணக்கீட்டு எண்ணக்கரு

நிதிக்கூற்றுகளானது வரலாற்றுக்கிரைய எண்ணக்கருவுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டது. பணவீக்கம் தொடர்பான விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

1.1.4. ஐந்தொகைக்குப் பின்னரான செம்மையாக்கல்

ஐந்தொகை திகதிக்குப் பின்னர் சாத்தியப்படக்கூடிய பொருள் விளைவுகளுக்காக நிதிக்கூற்றில் தேவையான மாற்றங்கள் செய்யப்பட்டு கணக்கில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

1.2. சொத்துக்களும் மதிப்பிடலும்

நடைமுறைச் சொத்துக்களானவை காசு, வங்கிமீதி மற்றும் ஏனையவை ஒரு வருட காலத்திற்குள் காசாக மாற்றப்படக்கூடியவை.

1.2.1 சொத்துக்கள்

நிலையான சொத்துக்கள் யாவும் பெறுமானத் தேய்வுக்கு உட்படுத்தப்பட்டவை.

1.2.2 நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்மானம்

தேய்மான ஏற்பாடானது நேர்கோட்டுமுறையில் கணிப்பிடப்படுகிறது. குறித்த வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் அமைக்கப்பட்ட கட்டிடத்திற்கு முழு ஆண்டிற்கான பெறுமானத் தேய்வு கணிக்கப்படும். குறித்த ஆண்டிற்கான பெறுமானத் தேய்வானது வருடத்திற்கான வருமானச் செயற்பாட்டுக் கூற்றில் பதிவழிக்கப்படும்.

- கணினி மற்றும் உபகரணங்கள் 25%
- தளபாடங்கள் 10%
- ஏனைய உபகரணங்கள் 25%
- மோட்டார் வாகனங்கள் 12.5%
- ஆய்வுகூட உபகரணங்கள் 25%
- ஆய்வுகூட தளபாடங்கள 10%
- கட்டிடங்கள் 5%

1.2.2 மீள்மதிப்பீடு

கணினி உபகரணங்கள் மற்றும் பிற உபகரணங்களின் மீள்மதிப்பீடானது நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை தொழில்சார் நிபுணர்களால் மேற்கொள்ளப்படுகிறது. தேறிய மிகையானது சொத்தின் நிகர பெறுமதியினூடாக கணிக்கப்பட்டு சொத்தானது மீள்மதிப்பீட்டுத்தொகைக்கு மாற்றீடு செய்யப்படும்.

1.2.3 கையிருப்புக்கள்

SLPSAS-9, பந்தி-16 இன்படி பரிமாற்றம் அல்லாத பரிவர்த்தனை மூலம் சரக்குகள் கையகப்படுத்தப்பட்ட ஆண்டில் முடிவடைந்த சரக்குகள் மதிப்பிடப்பட்டதோடு அவற்றின் விலையானது கையகப்படுத்தப்பட்ட திகதியின்படி அவற்றின் நியாயமான மதிப்பில் அளவிடப்படும்.சரக்குகளின் நியாயமான மதிப்பானது (அ) கொள்முதல் விலை (ஆ) இறக்குமதி வரிகள் மற்றும் பிற வரிகள் (இ) போக்குவரத்து, கையாளுதல் மற்றும் முடிவடைந்த பொருட்களை வாங்குவதற்கு நேரடியாகக் குறிப்பிடப்படும் ஏனைய செலவுகள் அடங்கும்.

- மனித சிறுநீர் மாதிரி சேகரிப்பு உபகரணங்கள்
- காகிதாதிகள்
- டோனர்கள் மற்றும் காட்ரிஜ்கள்

1.3. நிதிக்கூற்று தயாரிப்பின்போது அடையாளங்காணப்பட்ட அனைத்துப் பொறுப்புக்களும் கணக்கில் வைக்கப்பட்டுள்ளன. ஐந்தொகைக்கான தேதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் செலுத்தப்படவேண்டிய அல்லது கோரிக்கையின் பேரில் செலுத்தப்படவேண்டிய கொடுப்பனவுகள் நடைமுறைப் பொறுப்புக்களாக நிதிக்கூற்றில் அடையாளங்காட்டப்பட்டுள்ளன. நிலையான பொறுப்புக்கள் என்பது ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலப்பகுதிக்குள் செலுத்தப்படவேண்டிய கொடுப்பனவுகளைக் குறிக்கும்.

1.3.1 ஊழியர்களின் உரிமைகள்.

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் தொடர்பான கொடுப்பனவுகள் யாவும் வருடத்திற்கான வருமானச் செயற்பாட்டுக் கூற்றில் செலவுகளாகக் காட்டப்படும்.

1.3.2. ஊழியர்களின் பணிக்கொடை கொடுப்பனவுகள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 16 க்கு அமைவாக ஒவ்வொரு ஊழியருக்குமான பணிக்கொடை ஏற்பாடானது அவரது முதலாவது சேவைக்கால ஆண்டிலிருந்து கணிக்கப்படும். எவ்வாறாயினும் 1983 ஆம் ஆண்டு 12ம் இலக்க பணிக்கொடைச் சட்டத்திற்கு அமைவாக தொடர்ச்சியாக ஐந்து வருடகாலச் சேவையினைப் பூர்த்திசெய்த ஊழியரே பணிக்கொடைக் கொடுப்பனவுக்கு உரித்துடையவர். இப்பணிக்கொடையானது ஒவ்வொரு ஆண்டு இறுதிமாதச் சம்பளத்தின் அரைப்பகுதியே செலவினமாகக் கணிக்கப்படும்.

1.4. வருமானக்கூற்று

1.4.1 வருமானங்கள்

இலங்கை பொதுக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக வருமானங்கள் யாவும் அட்டூறு முறையில் கணிக்கப்பட்டுள்ளது.

1.4.2 செலவினங்கள்

வருமான மிகையானது எல்லாச்செலவுகளும் உள்ளடங்கலாக வருமான வரிக்கு முன்னரான இலாபத்தைக் குறிக்கும். வருமான விபரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வருமானங்கள் மற்றும் இழப்புகள், வரிவிதிப்புக்கு முன்னர் மற்றும் அனைத்து பொறுப்புகளுக்குமான ஒதுக்கீட்டின் பின்னர் அடையாளம் காணப்பட்டுள்ளன.

சொத்துக்களைப் பராமரிப்பதிலும் வணிகத்தை நடாத்துவதிலும் ஏற்படும் செலவுகள் நிகரப் பற்றாக்குறையைக் கணக்கிடுவதில் வருமான விபரங்களுடன் சரிசெய்யப்பட்டுள்ளன.

தொலைபேசி, மின்சாரம் மற்றும் நீர் கட்டணங்கள் மற்றும் அத்தகைய வசதிகளுக்கு உரித்துடைய உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்களால் வசூலிக்கப்படும் கட்டணம் மற்றும் அதற்கான செலவுகள் நிரல்களில் விபரிக்கப்பட்டுள்ளன.

1.4.3 கொடைகள்

கொடைகளும் உதவிகளும் அதனுடன் தொடர்புடைய செலவுகளுடன் செம்மையாக்கப்படும். கொடைகளும் உதவிகளும் சொத்துக்களாக இருப்பின் குறிப்பிட்ட ஆயுட்கால அடிப்படையில் வருமானச் செலவுக்கூற்றில் பதிவழிக்கப்படும்.

1.4.4 ஏனைய நிதியங்களும் உதவிகளும்

ஏனைய நிதியங்கள் மற்றும் உதவிகளால் கிடைக்கப்பெற்ற நிதியானது அதனுடன் தொடர்புபட்ட செலவினங்களின் பின்னர் ஏதாவது நிலுவைகள் இருக்குமாயின் அவை குறித்த நோக்கங்கள், திட்டங்கள் முடிவடைந்த பின்னர் வருடாந்த வருமானக்கூற்று அறிக்கையில் பதிவழிக்கப்படும்.அமைச்சக மானியங்கள் மற்றும் நிதியுதவிகள் விரிவான வருமான அறிக்கையில்

செலவாக கணக்குவைக்கப்பட்டுள்ளன, நிகழ்வின் முடிவில் ஏதேனும் தொகை காணப்படுமிடத்து அது ஏனைய வருமானமானமாக வருமான அறிக்கையில் குறிப்பிடப்படவேண்டும்.

1.5. காசுப் பாய்ச்சல் கூற்று

1.5.1 காசு

கையிலுள்ள பணம் மற்றும் அதிக பணப்புழக்கம் உள்ள சொத்துக்கள் மற்றும் எவ்வித ஆபத்தும் இல்லாமல் உடனடியாக பணமாக மாற்றக்கூடிய சொத்துக்கள் உடனடியாக பணமாக மாற்றக்கூடிய சொத்துக்கள் பணமாக அடையாளம் காணப்பட்டுள்ளன. திரவத்தன்மையுள்ள காசுமீதியும் வங்கிமீதியும் காசாகக் காட்டப்பட்டுள்ளது. ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல்க் கூற்றானது நேரில் முறையில் தயாரிக்கப்பட்டது.

1.5.2. ஐந்தொகைக்குப் பின்னான செம்மையாக்கல்

குறிப்பிடப்பட்ட செம்மையாக்கல் நடவடிக்கைகள் நிதிக் கூற்றுக்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை (SLADA)

31ம் திகதி மார்கழி 2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக் குறிப்புகள்

நிதிக்கூற்றுக் குறிப்புகள்

குறிப்பு-1

சொத்துக்கள், தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள்

(இலங்கை ரூபாய்)

செலவினங்கள்/ மீள்மதிப்பீடுசெய்யப்பட்டது	01.01.2022 இல் உள்ளவாறான மீதி	வருடத்திற்கான செம்மையாக்கல்	மீள்மதிப்பிட்ட செம்மையாக்கல்	31.12.2022 இல் உள்ளவாறான மீதி
கட்டிடங்களும் அமைப்புக்களும்	216,986,038.04	203,931.53	-	217,189,969.57
தளபாடங்கள்	873,436.35	-	-	873,436.35
கட்டிடங்களும் அமைப்புக்களும்	2,739,780.00	366,154.27	-	3,105,934.27
ஏனைய உபகரணங்கள்	2,350,650.00	65,350.00	-	2,416,000.00
வாகனங்கள்-WPLW-0353	6,024,980.00	-	-	6,024,980.00
ஆராய்ச்சிப் பிரிவுக்கான உபகரணங்கள்	11,445,500.35	61,367,800.00	2,943,500.35	69,869,800.00
ஆராய்ச்சிப் பிரிவுக்கான தளபாடங்கள்	16,876,414.30	-	-	16,876,414.30
	257,296,799.04	**62,003,235.80**	**2,943,500.35**	**316,356,534.49**

திரண்ட பெறுமானத்தேய்வு	01.01.2022 இல் உள்ளவாறான மீதி	வருடத்திற்கான செம்மையாக்கல்	மீள்மதிப்பிட்ட செம்மையாக்கல்	31.12.2022 இல் உள்ளவாறான மீதி
கட்டிடங்களும் அமைப்புக்களும்	32,330,345.76	10,859,498.48	-	43,189,844.24
தளபாடங்கள்	606,072.92	87,343.73	-	693,416.65
கணினிகளும் உபகரணங்களும்	684,945.00	776,483.57	-	1,461,428.57
ஏனைய உபகரணங்கள்	587,662.50	604,000.00	-	1,191,662.50
வாகனங்கள் -WPLW-0353	3,517,057.13	753,125.87	-	4,270,183.00
ஆராய்ச்சிப் பிரிவுக்கான உபகரணங்கள்	5,740,299.65	18,158,343.09	23,898,642.74	-
ஆராய்ச்சிப் பிரிவுக்கான தளபாடங்கள்	3,375,282.86	1,687,641.43	-	5,062,924.29
	46,841,665.82	**32,926,436.17**	**23,898,642.74**	**55,869,459.25**
31.12.2021 இல் உள்ளவாறான தேறிய ஏட்டுப் பெறுமதி	**210,455,133.22**	**29,076,799.63**	**(20,955,142.39)**	**260,487,075.24**

இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை
31ம் திகதி மார்கழி 2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக் குறிப்புகள்
நிதிக்கூற்றுக் குறிப்புகள்

(இலங்கை ரூபாய்களில் தரப்பட்டுள்ளது)

குறிப்பு-2	2022	2021
மூலதனக் குறைவேலைகள்		
ஆராய்ச்சிப் பிரிவுக்கான உபகரணங்கள்	-	60,211,400.00
	-	**60,211,400.00**

கட்டிடக்குறைவேலை என்பது ஆராய்ச்சிப் பிரிவிற்கான தளபாடங்கள் மற்றும் LC-MS/MS உபகரணத்தின் கொள்வனவு போன்ற செலவினங்களைக் குறிக்கும். ஆராய்ச்சிப் பிரிவானது முழுமையாக செயற்படும்போது அச்செலவினமானது சொத்துக்களாக மாற்றப்பட்டு கணக்கில் வைக்கப்படும்.

குறிப்பு-3

இருப்பு		
இறுதி இருப்பு - மாதிரி சேகரித்தல் கருவிகள் (வீர வீராங்கணைகளுக்கானது)	815,540.00	1,489,540.00
இறுதி இருப்பு - மாதிரி சேகரித்தல் கருவிகள் (குதிரைகளுக்கானது)	578,615.00	236,220.00
இறுதி இருப்பு- டோனர்கள் மற்றும் காட்ரிஜ்கள்	212,307.00	279,820.20
	1,606,462.00	**2,005,580.20**

குறிப்பு-4

பெறுவனவுகள்		
பரிசோதனை வருமானங்கள்-இலங்கை கிரிக்கட்	870,000.00	672,000.00
பரிசோதனை வருமானங்கள்- ரோயல் டர்ப் கழகம்	714,100.00	624,100.00
பரிசோதனை வருமானங்கள – சர்வதேச மாற்றுத்திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டிகள்	154,928.00	-
	1,739,028.00	**1,296,100.00**

குறிப்பு-5

முன்வைப்பு செலவுகள்		
ஜோன் கீல்ஸ் ஒபிஸ் ஒடோமேஷன்(ப்ரைவட்)லிமிடட்	6,486.26	4,864.70
மெட்ரோபொலிடன் ஒபிஸ் (ப்ரைவட்) லிமிடட்	2,880.00	2,880.00
ஒபிஸ்ட்ரொனிக்ஸ்(ப்ரைவட்)லிமிடட்	12,083.33	7,083.33
ஹேலீஸ் அவன்டுரா(ப்ரைவட்) விமிடட்	-	132,525.00
ஜோர்ஜ் ஸ்டுவர்ட் சொலூஷன்ஸ்	-	140,481.00
அமீகோ டெக்னொலஜீஸ்(ப்ரைவட்) லிமிடட்	-	96,390.00
சிறி லங்கா டெலிக்கொம்	75,603.60	-
சிறி லங்கா டெலிக்கொம்	139,196.60	-
	236,249.79	**384,224.03**

குறிப்பு -6

காசு மற்றும் காசுக்கு சமமானவையும்		
இலங்கை வங்கி - கணக்கிலக்கம் (75463697)	1,663,842.06	3,750,780.96
	1,663,842.06	**3,750,780.96**

குறிப்பு-7 (இலங்கை ரூபாய்களில் தரப்பட்டுள்ளது)

திறைசேரி நிதி

ஆரம்ப மீதி 01.01.2022	251,811,034.63	266,229,421.89
உட் பாய்ச்சல் -2022	58,616,000.00	50,056,000.00
	310,427,034.63	316,285,421.89
பதிவழிக்கப்பட்ட நிதி 2022	(92,737,518.22)	(64,474,387.26)
இறுதி மீதி 31.12.2022	**217,689,516.41**	**251,811,034.63**

குறிப்பு -8	**2022**	**2021**
அமைச்சு நிதி		
ஆரம்ப மீதி 01.01.2022	1,445,090.38	2,198,212.88
வருட வருமான செயற்பாட்டு மிகை 2021	(753,125.87)	(753,122.50)
இறுதி மீதி 31.12.2022	**691,964.51**	**1,445,090.38**

குறிப்பு -9

திரண்ட நிதியம்

ஆரம்ப மீதி	6,314,053.91	4,465,033.91
நிதிக்கூற்று நடவடிக்கைகளிலிருந்து மாற்றப்பட்ட மிகை	2,319,003.52	1,849,020.00
இறுதி மீதி	**8,633,057.43**	**6,314,053.91**

குறிப்பு -10

மீள்மதிப்பீட்டு இருப்பு

மீள்மதிப்பீட்டு இருப்பு	2,547,085.96	2,547,085.96
மீள்மதிப்பீட்டு மிகை 2022	20,955,142.39	-
இறுதி மீதி	**23,502,228.35**	**2,547,085.96**

குறிப்பு -11

கடன்கொடுத்தோர் மற்றும் நிறுத்திவைப்பு

ஜோர்ஜ் ஸ்ட்ருவர்ட்ஸ் எஞ்சினியரிங் (ப்ரைவட்)லிமிட்டட்	-	2,549,144.14
எனலிட்டிக்கல் இன்ஸ்ட்ருமன்ட்ஸ்	472,915.80	472,915.80
ஹேலீஸ் லைப் சயன்ஸ் (ப்ரைவட்) லிமிட்டட்	3,278,500.00	9,278,500.00
என்டி டோப்பிங் லெப் கட்டார்	7,631,250.00	-
	11,382,665.80	**12,300,559.94**

குறிப்பு -12

அட்டுறுக்களும் சென்மதிகளும்

தொடர்பாடல் செலவுக்கான கொடுப்பனவு	29,448.06	32,939.62
மின்சாரம் மற்றும் நீர் விநியோகத்துக்கான செலவுகள்	179,623.56	225,776.06
குத்தகை வாகனக் கொடுப்பனவுகள்	-	216,000.00
வேதனங்களும் சம்பளங்களும்	16,000.00	-

மேலதிகக் கொடுப்பனவுக்கான நிலுவைகள்	57,757.62	63,561.33
பிரயாணச்செலவுகள்	90,000.00	88,000.00
பாதுகாப்பு ஊழியருக்கான கொடுப்பனவு	266,328.20	192,014.00
துப்புரவு பணியாளர்களுக்கான கொடுப்பனவு	178,000.00	150,050.00
கணக்காய்வுக்கான கட்டணம்	263,600.00	-
ஊக்குமருந்து பரிசோதனைக் கட்டணம்	119,547.62	69,458.48
பராமரிப்புச் செலவுகள்- காணி மற்றும் கட்டிடங்கள்	-	33,480.00
பராமரிப்புச் செலவுகள்- கட்டிடங்கள் மற்றும் உபகரணங்கள	-	156,756.60
வெளியீடு மற்றும் விளம்பரம்	11,550.00	-
	1,211,855.06	**1,228,036.09**

(இலங்கை ரூபாய்களில் தரப்பட்டுள்ளது)

குறிப்பு -13

ஊழியர்களின் பணிக்கொடைக்கான ஏற்பாடு

	2022	**2021**
ஆரம்ப மீதி	2,417,357.50	1,719,646.41
வருடத்திற்கான ஊழியர்களின் பணிக்கொடைக்கான செலவினங்கள்	(299,675.00)	-
வருடத்திற்கான செலவு	463,687.03	697,711.09
இறுதி மீதி	**2,581,369.53**	**2,417,357.50**

குறிப்பு -14

ஏனைய வருமானங்கள்

ஊக்குமருந்து பரிசோதனைக் கட்டணம்	1,603,417.00	1,781,520.00
மீளளிக்கப்படாத வைப்புக்கள்	8,000.00	-
வாடகை வருமானங்கள்	78,750.00	67,500.00
ஏனைய வருமானங்கள்	628,836.52	-
	2,319,003.52	**1,849,020.00**

குறிப்பு -15

நிருவாகச் செலவுகள்

வேதனங்களும் சம்பளங்களும்	13,813,220.19	12,209,450.24
தவிசாளருக்கான கொடுப்பனவு	-	450,000.00
மேலதிக மற்றும் விடுமுறைக் கொடுப்பனவுகள்	558,481.76	546,318.66
ஊழியர் சேமலாப நிதிக் கொடுப்பனவு	1,384,496.03	1,393,945.95
ஊழியர் நம்பிக்கை நிதியக் கொடுப்பனவு	346,124.01	348,486.48
உள்நாட்டு பிரயாண மற்றும் எரிபொருள் செலவுகள்	600,000.00	600,000.00
வெளிநாட்டு பிரயாணமும் மற்றும் இணைந்தபடிச் செலவுகள்	454,948.80	-
எழுதுகருவிகளும் சிறுசெலவுகளும்	250,089.62	1,169,828.02
பிரயாண மற்றும் எரிபொருள் செலவுகள்	2,280,751.50	963,950.00
வாகனங்களுக்கான பராமரித்தல் செலவு	110,724.02	105,550.67
கட்டிடங்கள் பராமரித்தலுக்கான செலவு	157,960.00	770,948.36
உபகரணங்களும் இயந்திரங்களுக்குமான பராமரிப்புச் செலவு	2,006,604.43	782,236.51

பிரயாணச் செலவுகள்	1,129,937.00	1,066,840.00
தொழிற்பாட்டுக் குத்தகை வாகனத்திற்கான கட்டணம்	2,401,000.00	2,592,000.00
தொடர்பாடல் செலவுகள்	446,863.28	381,823.32
மின்சாரம், நீர் விநியோகத்திற்கான செலவுகளும்	2,806,659.86	2,688,411.81
ஊக்குமருந்து பரிசோதனைக்கான செலவுகள்	15,958,669.85	9,350,323.03
விளம்பரங்கள் மற்றும் பிரச்சாரச்செலவுகள	905,280.00	1,785,768.40
பயிற்சிகள் மற்றும் கூட்டங்கள் தொடர்பான செலவுகள்	877,883.09	996,275.14
அங்கத்துவ கட்டணங்கள்	5,625,034.46	2,869,043.03
கணக்காய்வு செலவுகள்	384,200.00	-
விநியோகமும் ஆராய்ச்சிக்குமான செலவுகள்	116,380.27	110,000.00
விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கான செலவுகள்	5,400.00	296,088.76
சேயற்திறன் விருத்தி	352,309.00	79,240.00
தேய்மானச் செலவுகள்	32,926,436.17	17,511,392.06
பணிக்கொடைக்கான வருடச்செலவு	463,687.03	697,711.09
பராமரிப்புச் செலவுகள்	2,016,937.50	1,537,598.76
பாதுகாப்பு ஊழியருக்கான செலவினங்கள்	2,613,567.90	2,247,913.00
ஏனைய செலவினங்கள்	80,744.44	-
ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டெதிர்ப்பு தொடர்பான கல்வி	325,887.75	-
ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டெதிர்ப்பு தொடர்பான அமலாக்கம் மற்றும் செயற்படுத்தல்.	537,557.00	-
ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி	283,119.23	298,557.45
சட்டம் மற்றும் அமலாக்கச் செலவுகள்	557,872.00	321,333.00
கட்டிடம் மற்றும் அமைப்பு - புனர்நிர்மாணம் மற்றும் பராமரிப்புச் செலவுகள்	-	263,304.00
கட்டிடங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் - புனர்நிர்மாணம்	683,317.90	-
வாகனங்கள் - புனர்நிர்மாணம் மற்றும் பராமரிப்புச் செலவுகள்	28,500.00	793,172.02
	93,490,644.09	**65,227,509.76**

Translated Version - Tamil

தலைவர்,

இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மைஇ

இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுகள் மற்றும் வேறு நடைமுறை மற்றும் சட்டரீதியான தேவைகள் மீதான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

1.நிதிக் கூற்றுகள்

1.1 கணக்காய்வு தொடர்பான அபிப்பிராயம்

ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டுக்கெதிரான இலங்கை முகவராண்மையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, நிதிப்பாய்ச்சல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுடன் தொடர்புடைய குறிப்புகள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களின் பொழிப்புகளை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகள் 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச்சட்டத்தின் 30 ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினுடைய அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரை பிரகாரம் எனது அறிக்கை உரிய காலப்பகுதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றலினையும் ,காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2. கணக்காய்வு அபிப்பிரயாயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கியல் நியம எண் 07 இன் 69 ஆம் பந்தியின் படி சொத்து மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கு ஏற்ற தினத்திலிருந்து தேய்மான ஏற்பாடுகள் செய்யப்படவேணடும் எனினும் குறித்த நியம விதிமுறைகளுக்கு முரணாக முகவராண்மையால் ஆண்டு முழுவதற்குமான தேய்மான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமையால் ரூ 15.2 மில்லியன் மதிப்பிலான தேய்மானம் மிகையாகக் காட்டப்பட்டுள்ளதோடு குறித்த பெறுமானத்தால் சொத்து மற்றும் உபகரணங்களின் பெறுமானமும் குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கியல் நியம எண் 01 இன் பந்தி 08 இன்படி,12 மாத காலத்திற்குள் செலுத்தப்படாது என எதிர்ப்பார்க்கப்படும் மீதியானது, நிதிக்கூற்று அறிக்கையில் நடைமுறை அல்லாத பொறுப்பாக குறிப்பிடப்படவேண்டும், எனினும் அதற்காக செலுத்தப்படவேண்டிய பணிக்கொடைத் தொகையானது 2023 ஆம் ஆண்டு அடையாளம் காணப்படவில்லை, அதற்குப் பதிலாக 2022 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள முழுமதிப்பான ரூ 2.6 மில்லியன் நடைமுறை பொறுப்பாக குறிப்பிடப்பட்டுள்ளது.

(இ) 31 டிசம்பர் 2022 க்குள் வெளிநாட்டு நிறுவனத்திற்கு செலுத்தப்படவேண்டிய ரூ.4.8 மில்லியன் தொகைக்கான ஒதுக்கீடானது நிதிக் கூற்றில் வழங்கப்படவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமத்தின் கீழ் எனது பொறுப்பு , அவ்வறிக்கையில் நிதி கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவின் கீழ் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிரயாயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன்.

1.3. ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மையின் 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய விபரங்கள்

இக் கணக்காய்வு அறிக்கை திகதிக்கு பின்னர் என்னால் வழங்குவதற்கு எதிர்ப்பார்க்கப்படும் முகவராண்மையின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை உள்ளடக்கப்பட்டிருப்பதோடு நிதிக்கூற்று மற்றும் அது தொடர்பாக அறிக்கையில் உள்ளடக்கப்படாத விபரங்கள் ஏனைய விபரங்கள் என அறியப்படும். இவ் ஏனைய விபரங்கள் தொடர்பாக நிர்வாகமானது பொறுப்புக்கூறவேண்டும்.

நிதிக்கூற்று தொடர்பாக என்னுடைய அபிப்பிராயத்தில் ஏனைய விபரங்கள் உள்ளடக்கப்படாததோடு என்னால் எவ்வகையிலும் அவை தொடர்பாக சான்றுப்படுத்தப்படமாட்டாது அல்லது அபிப்பராயம் தெரிவிக்கப்படமாட்டாது.

நிதிக்கூற்று சார்பான என்னுடைய கணக்காய்வுக்கு ஏற்ப, மேற்படி இனங்காணப்பட்ட ஏனைய விபரங்களை பெற்றுக்கொள்ளக்கூடிய சாத்தியக்கூறு உள்ளபோது அவற்றை வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும்போது ஏனைய விபரங்கள் நிதிக்கூற்றுடன் அல்லது கணக்காய்வின்போது வேறு வகையில் பெறப்பட்ட எனது அறிவிற்கு ஏற்ப பெறுமான ரீதியில் பொருத்தமற்றதாக உள்ளதா என கருத்திற்கொள்வதாகும்.

முகவராண்மையின் 2022 வருடாந்த அறிக்கையை வாசிக்கும்போது அதில் பெறுமான ரீதியான பிழை உள்ளது என நான் தீர்மானிக்கும் பட்சத்தில் , உரிய திருத்தங்களை மேற்கொள்வதற்காக நிர்வாகத் தரப்பினருக்கு அவ்விடயங்கள் சம்பந்தமாக தொடர்பாடல் மேற்கொள்ளப்படவேண்டும். மேலும் உரிய திருத்தங்கள் செய்யப்படாத பிழைகள் காணப்படும் பட்சத்தில் அவை அரசியலமப்பின் 154(6) ஆம் சட்டத்தின் பிரகாரம் உரிய காலப்பகுதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவம் மற்றும் நிர்வாக தரப்பினரின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பெரும்பான்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுகளைத் தயரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவமானது நிர்ணயிக்கின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளுக்கு நிர்வாகமானது பொறுப்பு வகிக்கின்றது

நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும்போது , ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டுக்கெதிரான இலங்கை முகவராண்மை நிறுவனத்தினை தொடர்ந்து முன்னெடுத்துச்செல்வதற்கான தகைமையை நிர்ணயிப்பதானது முகாமைத்துவத்தின் பொறுப்பாவதுடன், முகவராண்மையினை முடிவுறுத்துவதற்கு தீர்மானிக்கும்போது அல்லது வேறு மாற்றுவழி இல்லாத பட்சத்தில் பணிகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டாலேயன்றி தொடர்ந்து முன்னெடுத்துச்செல்வதற்கான அடிப்படையின் பிரகாரம் கணக்குக்காட்டுதல் மற்றும் முகவராண்மையை தொடர்ந்து முன்னெடுத்துச்செல்வதற்கான எண்ணக்கருக்களை வெளிப்படுத்தல் போன்றவை முகாமைத்துவத்துக்கான பொறுப்பாகும்.

ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டுக்கெதிரான இலங்கை முகவராண்மைக்கான நிதி அறிக்கைப்படுத்தல் நடவடிக்கைகள் தொடர்பான பொறுப்பு நிர்வாகத் தரப்பினரைச் சார்ந்ததாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப உறுப்புரையின் பிரகாரம் , முகவராண்மையின் ஆண்டுக்கான மற்றும் மாதாந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு ஏற்றவகையில் வருமானம் ,செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் உரியமுறையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படவேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றானது , மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பெரும்பாண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டது என நியாயமான உறுதிப்பாட்டை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் அடங்கிய கணக்காய்வு அறிக்கையை வழங்குதல் என்பவை எனது குறிக்கோள்களாகும். நியாயமான உறுதிப்பாடானது அதியுயர் உறுதிப்பாடாக இருப்பினும் இலங்கை கணக்கிட்டு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வானது மேற்கொள்ளப்படும்பொது எப்பொழுதும் போதியளவு தவறான கூற்றுக்களை வெளிப்படுத்தும் உறதிப்பாடாக அமையாது. மோசடி மற்றும் தவறுகள் தனித்து அல்லது கூட்டாக ஏற்படுத்தும் விளைவுகளால் தவறான கூற்றுக்கள் ஏற்படுவதுடன், இந்நிதிக்கூற்றை அடிப்படையாகக் கொண்டு பரிசீலிப்பவர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானத்தின் மீது ஏற்படுத்தக்கூடிய பாதிப்பில் தங்கியுள்ளது..

தொழில்சார் ஒழுக்கநெறியுடனும் மற்றும் எவ்விதமான தொழில்சார் சந்தேகமும் இன்றி இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும்,

- மோசடி மற்றும் தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுகளின் ஆபத்தினை இனங்காண்கையில் மற்றும் மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக்கொள்வதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை எனது அபிப்பிராயம் அடிப்படையாகக் கொண்டுள்ளது. பெரும்பாண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படுத்தப்படும் பாதிப்பைவிட மோசடியால் ஏற்படுத்தப்படும் பாதிப்பு அதிகமாகும். அத்துடன் பிரதிநிதிகள் மூலமான மோசடி , போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளைத் தவிர்த்தல் மோசடிகள் ஏற்படுவதற்கான காரணங்களாகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் வினைத்திறன் தொடர்பான அபிப்பிராயத்தை நோக்கத்தோடு அல்லாது சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பாக புரிந்துகொள்ளப்பட்டது.

- பிரயோகிக்கப்பட்ட கணக்கீட்டுக்கொள்கை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்பாடுகளின் தகுதி போன்றவை மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் மற்றும் நிலைப்பாடுகள் காரணமாக முகவராண்மையின் தொடர்ச்சியாக முன்னெடுத்துச்செல்லல் தொடர்பான போதியளவு நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு சான்றுகளின் அடிப்படையில் கணக்கீடு தொடர்பாக நிறுவனத்தின் தொடர்ச்சியாக முன்னெடுத்துச்செல்லல் தொடர்பான அடிப்படையைப் பிரயோகிப்பதற்கான இயைபுடைமையானது தீர்மானிக்கப்பட்டது. போதியளவு நிச்சயமற்றதன்மை காணப்படுவதாக நான் அனுமானிக்குமிடத்து நிதிக்கூற்றுகளில் அது தொடர்பான வெளிப்பாடுகள் மீது எனது கணக்காய்வு அறிக்கையின் கவனத்தை செலுத்தியதுடன் , அவ் வெளிப்பாடுகள் போதியளவு காணப்படாத பட்சத்தில் எனது அபிப்பிராயத்தை நான் மீளப்பெறவேண்டும். எவ்வாறாயினும் எதிர்காலத்தில் நிகழக்கூடிய சம்பவங்கள் மற்றும் நிலைப்பாடுகளின் அடிப்படையில் தொடரச்சியாக முன்னெடுத்துச்செல்லலுக்கான அடிப்படையானது நிறைவடையக்கூடும்.

- வெளிப்பாடுகளை உள்ளடக்கிய நிதிக்கூற்றுகளின் சமர்ப்பிப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் போன்றவை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் அவற்றுக்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமாக நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளதானது மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் மூலம் கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு தொடர்பான கண்டுபிடிப்புகள் , பிரதான உள்ளக கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் மற்றும் ஏனைய காரணிகள் தொடர்பாக நிர்வாகம் செய்யும் தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

2. ஏனைய நடைமுறை மற்றும் சட்டரீதியான தேவைகள் தொடர்பான அறிக்கை

2.1. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் தேவைகள் தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு இணங்க, எனது அறிக்கையின் கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை என்ற பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள பாதிப்புகளை தவிர கணக்காய்வுக்கு தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் விளக்கமளித்தல்கள் என்னால் வழங்கப்பட்டுள்ளதுடன் , முகவராண்மையால் உரிய முறையில் நிதி அறிக்கை முன்னெடுத்துச் சென்றுள்ளமையானது எனது ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

2.1.2. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைய முகவராண்மையால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றானது கடந்த ஆண்டுடன் ஒத்துள்ளது.

2.1.3. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைய கடந்த ஆண்டில் என்னால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2.2. பின்பற்றப்பட்டுள்ள நடைமுறைகள் மற்றும் பெறப்பட்டுள்ள சான்றுகளின் அடிப்படையில் மற்றும் போதியளவு காரணிகளுக்கான வரையறைக்குள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுகளை முன்வைக்கும் அளவிற்கு எதுவும் எனது கவனத்தை எட்டவில்லை.

2.2.1. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு இணங்க முகவராண்மையின் நிர்வாகக்குழுவின் உறுப்பினர் ஒருவர் முகவராண்மை சம்பந்தப்பட்ட எந்தவொரு உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சாதாரண வர்த்தகம் சார் நிலைக்கு அப்பாற்பட்ட வகையில் தொடர்புடையவராவார் என்பது.

2.2.2. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (உ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு இணங்க ஏதாயினும் இயைபுடைய எழுதப்பட்ட சட்டத்திற்கு அல்லது முகவராண்மையின் நிர்வாகக் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள வேறு பொதுவான விதிமுறைகளுக்கு இணங்க செயற்படவில்லை என்பது.

2.2.3. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவராண்மையின் அதிகாரங்கள்,கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு விதிமுறைகளுக்கு இணங்க செயற்படவில்லை என்பது.

2.2.4. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க முகவராண்மையின் வளங்களை கையாளுதல், வினைத்திறனான மற்றும் பயன்தரு வகையில் குறித்த காலவரையறைக்குள் உரிய விதிமுறைகளுக்கு இணங்க பெறுகைகளுக்கான நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு பயன்படுத்தப்படவில்லை என்பது.

2.3. ஏனைய காரணிகள்

அ) இலங்கையில் நடாத்தப்படும் ஊக்குமருந்து கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள் சர்வதேச மட்டத்தில் மேற்கொள்ளப்படுவதோடு பாரம்பரிய மருந்துகள் , உணவு மற்றும் பானங்களின் உள்ளடக்கங்கள் மற்றும் அவற்றில் தடைசெய்யப்பட்ட பொருட்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பதை கண்டறிவதை நோக்காகக் கொண்டு முகவராண்மையின் ஆராய்ச்சிப் பிரிவிற்காக 2022 செப்டம்பர் மாதம் 13 ஆம் திகதி ரூ.60 மில்லியன் பெறுமதியான ஆராய்ச்சி உபகரணமானது 03 ஆண்டு உத்தரவாத காலத்தின் கீழ் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆய்வுகூட உதவியாளர் பணிக்கான ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படாமை மற்றும் உபகரணங்களின் செயற்பாட்டிற்கு தேவையான இரசாயனப் பொருட்களை கொள்வனவு செய்வதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக 2023 மார்ச் மாதம் 30ம் திகதி வரையிலும் இவ்வுபகரணம் உபயோகப்படுத்தப்படாமல் இருந்தது.

ஆ) 2022 டிசம்பர் மாதம் 31ம் திகதி செலுத்தப்படவேண்டிய ரூ. 7.6 மில்லியன் மீதியில் 06 மாதங்களுக்கு மேலான ரூ.4.2 மில்லியன் மீதி இருந்தது.

இ) முகவராண்மையின் 10 பதவி வெற்றிடங்களில் 03 சிரேஷ்டநிலைப் பதவிகள் இருந்தன,மேலும் பணிப்பாளர் (கல்வி மற்றும் பரிசோதனை) மற்றும் பணிப்பாளர் (அமலாக்கம் மற்றும் செயற்படுத்தல்) பதவிகளும் 2014 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக இருந்தன.

டபிள்யு.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

காரணி 01 - இலங்கை பொதுத்துறை கணக்கியல் நியம எண் 07 இன் 69 ஆம் பந்தியின் படி சொத்து மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கு ஏற்ற தினத்திலிருந்து தேய்மான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும் எனினும் குறித்த நியம விதிமுறைகளுக்கு முரணாக முகவராண்மையால் ஆண்டு முழுவதற்குமான தேய்மான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமையால் ரூ 15.2 மில்லியன் மதிப்பிலான தேய்மானம் மிகையாகக் காட்டப்பட்டுள்ளதோடு குறித்த பெறுமானத்தால் சொத்து மற்றும் உபகரணங்களின் பெறுமானமும் குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிர்வாகத்தின் கருத்து – இலங்கை பொதுத்துறை கணக்கியல் நியம எண் 07 இன் 69 ஆம் பந்தியின் படி, நடைமுறை அல்லாத சொத்துக்கள் பயன்படுத்துவதற்கு ஏற்ற திகதியிலிருந்து தேய்மானம் கணக்கிடப்படவேண்டும், எனினும் 2022 ஆம் ஆண்டின் கணக்கியல் கொள்கையின்படி பெறப்பட்ட நடைமுறை அல்லாத சொத்துக்களின் தேய்மானம் குறித்த ஆண்டுக்காக கணக்கிடப்பட்டுள்ளது. 31.12.2022 அன்று LC-MS/MS இயந்திரத்தின் மதிப்பு செயற்பாட்டிலுள்ள முலதனக் குறைவேலைக் கணக்கிலிருந்து நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் உள்ள ஆராய்ச்சி உபகரணங்களுக்கு மாற்றப்பட்டதால் நடைமுறை அல்லாத சொத்துக்களின் தேய்மானம் ரூ.15,155,524 அதிகமாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இலங்கை பொதுக் கணக்கியல் நியம எண் 08 இன் படி தேய்மானக் கொள்கை தயாரிப்பு 2023 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படும் என்று இதன்மூலம் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் சம்பந்தபபட்ட ஆண்டின் திறைசேரி மற்றும் அமைச்சு பாதீடுகளில் இருந்து வருடாந்த தேய்மானம் கழிக்கப்பட்டுள்ளதால், நிறுவனத்தின் இலாபத்தில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

காரணி 02 - இலங்கை பொதுத்துறை கணக்கியல் நியம எண் 01 இன் பந்தி 08 இன்படி நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 12 மாதங்களுக்குள் செலுத்தப்படவேண்டிய நிலுவைகள் நிதி அறிக்கைகளில் நடைமுறை அல்லாத பொறுப்புக்களாகக் காட்டப்படவேண்டும் எனினும் 2023 ஆம் ஆண்டு செலுத்தப்படவேண்டிய பணிக்கொடை மதிப்பு அங்கீகரிக்கப்படவில்லை மற்றும் 2022 ஆம் ஆண்டிற்குரிய ஒதுக்கீட்டுத்தொகையாகிய ரூ.2.6 மில்லியன் நடைமுறைப் பொறுப்பாகக் காட்டப்பட்டுள்ளது.

நிர்வாகத்தின் கருத்து –

2022 ஆம் ஆண்டின் இறுதியில் பணிக்கொடை ஒதுக்கீடாகிய ரூ.2,581,369 மீதியானது நடைமுறைக் கணக்காகக் காட்டப்பட்டுள்ளது. இலங்கை பொதுத்துறை கணக்கியல் நியமங்களின்படி எதிர்வரும் ஆண்டில் சேவையை முடிவுறுத்துவதற்கு எதிர்ப்பார்க்கும் பணியாளர்கள் அடையாளம் காணப்பட்டு குறித்த நிதியாண்டு முடிவடைந்து 12 மாதங்களுக்குள் செலுத்தப்படாமலிருப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படும் நிலுவைகள் நடைமுறையல்லாத பொறுப்புகளாக அடையாளங் காணப்பட்டு 2023 ஆம் ஆண்டிலிருந்து நிதிநிலை அறிக்கைகளில் சரியாகக் குறிப்பிடப்படும் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காரணி 03 - ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான பரிசோதனை அறிக்கைகளுக்காக 2022 , டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வெளிநாட்டு நிறுவனத்திற்கு செலுத்தப்படவேண்டிய ரூ. 4.8 மில்லியனுக்கான நிதி அறிக்கைகளில் எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை.

நிர்வாகத்தின் கருத்து – 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30 ஆம் திகதி 2 வவுச்சர்கள் மூலம் ஆய்வுகூடக் கட்டணங்களாக USD 7,700 மற்றும் USD 5,215 ரொக்கப்பணம் செலுத்தப்பட்டதோடு இத்தொகைகள் வங்கியால் 30.03.2023 அன்று செலுத்தப்பட்டது. மேலும் 2022 இல் எமது நாடு எதிர்நோக்கியுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடி மற்றும் வெளிநாட்டு கையிருப்பு பற்றாக்குறையை கருத்திற்கொண்டு 2022 இல் ஆய்வுகூடக் கட்டணங்களுக்கான அமெரிக்க டொலர்களை வெளியிடுவதில் எமது நடைமுறைக்கணக்கு பேணப்படும் இலங்கை வங்கியால் ஏற்படுத்தப்பட்ட தாமதமே இத்தொகை செலுத்துவதில் ஏற்பட்ட தாமதத்திற்கான காரணமாகும். இதன்காரணமாக 2022 ஆம் ஆண்டில் கடனாளர் மற்றும் பண இருப்பு ரூ.4.8 குறைவாக இருந்தது. 2023 ஆம் ஆண்டிலிருந்து இத்தகைய பலவீனங்கள் நிவர்த்தி செய்யப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

காரணி 04 - இலங்கையில் நடாத்தப்படும் ஊக்குமருந்து கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள் சர்வதேச மட்டத்தில் மேற்கொள்ளப்படுவதோடு பாரம்பரிய மருந்துகள் , உணவு மற்றும் பானங்களின்

உள்ளடக்கங்கள் மற்றும் அவற்றில் தடைசெய்யப்பட்ட பொருட்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பதை கண்டறிவதை நோக்காகக் கொண்டு முகவராண்மையின் ஆராய்ச்சிப் பிரிவிற்காக 2022 செப்டம்பர் மாதம் 13 ஆம் திகதி ரூ.60 மில்லியன் பெறுமதியான ஆராய்ச்சி உபகரணமானது 03 ஆண்டு உத்தரவாத காலத்தின் கீழ் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆய்வுகூட உதவியாளர் பணிக்கான ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படாமை மற்றும் உபகரணங்களின் செயற்பாட்டிற்கு தேவையான இரசாயனப் பொருட்களை கொள்வனவு செய்வதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக 2023 மார்ச் மாதம் 30ம் திகதி வரையிலும் இவ்வுபகரணம் பாவனைக்குட்படுத்தப்படாமல் இருந்தது

நிர்வாகத்தின் கருத்து – தாமதமான LC-MS/MS உபகரணங்களின் கொள்முதல் செயன்முறை 04.11.2022 திகதியிடப்பட்ட கடிதத்திற்குப் பின்னர் வெற்றிகரமாக முடிக்கப்பட்டதோடு 04.11.2022 ஆம் திகதி முதல் 03 வருட உத்தரரவாதக் காலம் ஆரம்பமானது. தொழிநுட்ப உதவியாளர்(ஆய்வுகூடம்) பதவி 2021.06.16 அன்று அங்கீகரிக்கப்பட்டதோடு அதன் ஆட்சேர்ப்பு நடைமுறை 2022.01.13 அன்று அங்கீகரிக்கப்பட்டது. அப்பதவி அத்தியாவசியமான பதவியாக விளங்கியதோடு , கடந்த காலப்பகுதியில் அனைத்து அரசாங்க ஆட்சேர்ப்புகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளதால் இந்த பதவியில் ஆட்சேர்ப்பு சாத்தியப்படவில்லை. இப்பதவிக்குரிய ஆட்சேர்ப்புக்காக அனுமதி கோரி தேசிய வரவு செலவுத் திணைக்களத்திற்கும் கோரிக்கை விடப்பட்டிருந்தது. தற்போது அரசாங்கத்தின் சகல ஆட்சேர்ப்புகளையும் மறுபரிசீலனை செய்து அனுமதி வழங்குவதற்கு பிரதமரின் செயலாளர் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவிற்கும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அனுமதி பெறப்பட்ட உடன் கூடிய விரைவில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். எதிர்வரும் காலங்களில் திட்டமிடப்பட்ட ஆய்வுகளுக்காக செய்யப்பட்ட இரசாயனப்பொருட்களைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இலங்கையில் அதிகரிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு நாணயக்கட்டுப்பாடுகள் காரணமாக நாட்டில் பாரியளவில் அத்தியாவசிய இரசாயனப்பொருட்களுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்நிலை படிப்படியாக சரிசெய்யப்படும்போது அதற்கான பொருட்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்

காரணி 05 - 2022 டிசம்பர் மாதம் 31ம் திகதி செலுத்தப்படவேண்டிய ரூ. 7.6 மில்லியன் மீதியில் 06 மாதங்களுக்கு மேலான ரூ.4.2 மில்லியன் மீதி இருந்தது

நிர்வாகத்தின் கருத்து – 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து **Anti- Doping Lab Qatar** ஆய்வுகூடத்தின் கொடுப்பனவுகளுக்காக இலங்கை வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்ட Telegraphic Transfer Orders , நாட்டில் நிலவும் அந்நியச் செலாவணி பற்றாக்குறை காரணமாக குறித்த வங்கியால் அவற்றை ஏற்றுக்கொள்வது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்து அக்கோரிக்கையானது நிராகரிக்கப்பட்டது. அமெரிக்க டொலர்கள் தொடர்ச்சியாக விடுவிக்கப்படாத காரணத்தால் **Anti- Doping Lab Qatar** ஆய்வுகூடத்திற்கு குறித்த கட்டணத்தை செலுத்துவதற்காக எழுத்துபூர்வமாக அவகாசம் கோரப்பட்டு அதனைத்தொடர்ந்து ஒருவருட கால அவகாசம் பெறப்பட்டது. மீண்டும் 2023ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் டொலர் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோடு திறைசேரியிலிருந்து பணம் விடுவிக்கப்பட்டவுடன் செலுத்தப்படவேண்டிய நிலுவைத்தொகை செலுத்தப்படும் என தெரிவித்துக்கொள்கிறோம். 2023 ஆம் ஆண்டிலிருந்து இத்தகைய பலவீனங்கள் நிவர்த்தி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காரணி 06 - முகவராண்மையின் 10 பதவி வெற்றிடங்களில் 03 சிரேஷ்டநிலைப் பதவிகள் இருந்தன,மேலும் பணிப்பாளர் (கல்வி மற்றும் பரிசோதனை) மற்றும் பணிப்பாளர் (அமலாக்கம் மற்றும் செயற்படுத்தல் பதவிகளும் 2014 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக இருந்தன.

நிர்வாகத்தின் கருத்து – பணிப்பாளர்(கல்வி மற்றும் பரிசோதனை) பதவிக்கான ஆட்சேர்ப்புக்காக 2019 ஆம் ஆண்டு விண்ணப்பம் கோரப்பட்டு , நேர்முகத்தேர்வு நடாத்தப்பட்டு தகுதியான விண்ணப்பதாரி தேர்வுசெய்யப்பட்டார். குறித்த உத்தியோகத்தர் , விளையாட்டு வைத்திய நிறுவனத்தின் வைத்தியராக பணியாற்றியதோடு அவர் ஓய்வூதியம் வழங்கப்படும் பதவியிலிருந்து விலகி முழுநேரம் எமது நிறுவனத்தில் மேற்குறிப்பிட்ட பதவியிலிருந்து பணியாற்ற முன்வரவில்லை. எனினும் அவர் 2023 ஆம் ஆண்டு வரை மேற்குறிப்பிடப்பட்ட பதவியில் பணி கண்காணிப்பு அடிப்படையில் எமது நிறுவனத்தில் பணிபுரிந்தார். எனினும் தற்போது (2023.04.03 முதல்) அவர் குறித்த பதவியில் இருந்து நீங்கி இருப்பதன் காரணமாக குறித்த பதவி வெற்றிடத்திற்காக மீண்டும் ஆட்சேர்ப்பு செய்வதற்கான அனுமதியைப்

பெறுவதற்காக பிரதமரின் செயலாளர் தலைமையில் நியமிக்கப்பட்ட அரசாங்க அனைத்து ஆட்சேர்ப்பு மறுஆய்வுக் குழுவிடம் கோரிக்கையானது சமர்ப்பிக்கப்பட்டது. அனுமதி பெறப்பட்டவுடன் பணி நியமனம் உடனடியாக மேற்கொள்ளப்படவுள்ளது.

இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதரிரான முகவராண்மையின் மற்றுமொரு சிரேஷ்ட முகாமைத்துவ பதவியான பணிப்பாளர்(அமலாக்கம் மற்றும் செயற்படுத்தல்) பதவியானது 2014 ஆம் ஆண்டு நிறுவனம் நிறுவப்பட்டதிலிருந்து பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆட்சேரப்புச் செயன்முறை மூலம் ஆட்சேர்ப்பு செய்ய முயற்சிக்கப்பட்டபோதும் அப்பதவிக்குப் பொருத்தமான விண்ணப்பதாரி முன்வரவில்லை. இதன் காரணமாக அதன் ஆட்சேர்ப்பு நடைமுறையும் திருத்தியமைக்கப்பட்டது. அதற்குப் பின்னரும் நிறுவனம் எதிர்ப்பார்த்த தகைமை கொண்ட எந்தவொரு பொருத்தமான நபரும் விண்ணப்பிக்கவில்லை. இதற்காக போதைப்பொருள் ஒழிப்புத்துறையில் அனுபவம் வாய்ந்த சிரேஷ்ட பொலிஸ் அல்லது காவல்துறை உத்தியோகத்தருடைய தேவைப்பாடு உள்ளது. இப்பதவி வெற்றிடம் நிலவுவதால் அத்தகைய பொலிஸ் அல்லது காவல்துறை உத்தியோகத்தரை இரண்டாம் நிலை அடிப்படையில் அந்நிறுவனத்திற்கு கோரிக்கைவிடுக்கப்பட்டது. ஆனால் அத்தகைய உத்தியோகத்தரை எமது நிறுவனத்திற்கு முழுநேர பணிநியமன அடிப்படையில் வழங்க முடியாது என்றும் பணிகண்காணிப்பு அடிப்படையில் மட்டுமே வழங்கமுடியும் என தெரிவிக்கப்பட்டது. எனவே இவ் அத்தியாவசிய பதவி வெற்றிடத்திற்காக பணி கண்காணிப்பு அடிப்படையில் 28.02.2023 முதல் இலங்கை பொலிஸின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் பணிகண்காணிப்பு அடிப்படையில் நியமிக்கப்படடுள்ளார்.